Nallur Branch Library
Nallur Branch Library

Registered as a Newspaper    பக்கங்கள் 6    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

The Eelanaatham    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 5    திருவள்ளுவர் ஆண்டு 2025    வைகாசி 3    (17 5 94)    செவ்வாய்க்கிழமை    ஓசை 88

## நோயினால் இறந்த கோழி உணவகத்தில் கண்டுபிடிப்பு

யாழ் மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் நோய்வாய்ப்பட்டு இறந்த மூன்று கோழிகளை உணவுச்சாலையில் சமைப்பதற்கு வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. யாழ் மாநகர சபை சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது இது கண்டுபிடிக்கப்பட்டதுடன் அக் கடை உரிமையாளர் எச்சரிக்கை செய்யப்பட்டார். இதேவேளை கடைகளில் இறைச்சி வகைகளை உண்ணும் போதோ அன்றி இறைச்சி வகைகளை கொள்வனவு செய்யும்போதோ பாவனையாளர் மிகுந்த அவதானமாக இருக்குமாறு யாழ் மாநகர சபை மருத்துவப்பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (நி)

# டி.பியை ஆதரிப்பதில்லையென ஐ. தே. க வில் ஒரு பகுதி முடிவு

## அரச உயர் அதிகாரிகளும் பின்னடிப்பு

(கொழும்பு)

**இவ் வருட இறுதியில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் டி, பி, விஜேதுங்கா போட்டியிட்டால் தாம் ஒத்துழைப்பு நல்கப் போவதில்லை என பாராளுமன்ற ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் குழுவொன்றும் ஐ. தே. க. ஆதரவாளர்களின் உயர்மட்ட அதிகாரிகள் குழு வொன்றும் தீர்மானித்திருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.**

ஜனாதிபதி டி-பி- விஜேதுங்காவின் நடவடிக்கையில் அதிருப்திகொண்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் களும், மற்றும் இதுவரை ஐ, தே, கட்சிக்கு விசுவாசமாகச் செயற்பட்ட உயர் பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட அரச அதிகாரிகளின் ஒரு பகுதியினருமே இவ்வாறு தீர்மானித்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன-

இதே வேளை ஆளும் கட்சி வெற்றி பெறுவதற்கு உதவ வேண்டாம் என தமது உறவினர், ஆதரவாளர்களிடமும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது இதனைத் தொடர்ந்து இச் செல்வாக்கு மிக்க அரசியல் வாதிகளின் வீடுகளைச் சோதனையிட பொலிசாருக்கு உத்தரவு இடப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதே சமயம், கடந்த 17 வருடங்களாக அரசாங்கத்திற்கு விசுவாசமாக இருந்த பொலிஸ் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு டி, பி. விஜேதுங்கா மேற்கொள்ளும் நடவடிக்கைகள் வெறுப்பை ஊட்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது பல பொலிஸ் அதிகாரிகள் அரசாங்கத்தின்

(6ஆம் பக்கம் பார்க்க)

## எட்டு மாதங்களாகியும் பரீட்சை முடிவுகள் இல்லை

### யாழ்.பல்கலை மாணவர் பாதிப்பு

(நல்லூர்)

1988-89 கல்வியாண்டில் பல்கலைக் கழக அனுமதி பெற்று 1993 ஒக்டோபர் மாதம் இறுதியாண்டுப் பரீட்சைக்குத் தோற்றிய கலைப்பீட மாணவர்களின் பெறுபேறுகள் எட்டு மாதங்களாகியும் வெளிவரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் இம் மாணவர் பலர் தொழில் வாய்ப்புகளை இழந்துள்ளார்கள். அண்மையில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் விசேட அடிப்படையில் பட்டதாரி பயிலுனர் ஆசிரியர் தெரிவுசெய்யப்பட்டனர். இறுதியாண்டுப் பரீட்சைப் பெறுபேறுள்கஇல்லாத காரணத்தால் யாழ் பல்

(6ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். பல்கலைக் கழகத்திற்கு

## 93-94 கல்வியாண்டிற்கு 517 மாணவர்கள் அனுமதி

### வெற்றிடங்களுக்கு 23 பேர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக 93-94 கல்வியாண்டிற்காக மொத்தம் 517 மாணவர்கள் அனுமதி பெற்றுள்ளனர். மருத்துவ பீடத்திற்கு 64 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் இப் பல்கலைக் கழகத்தில் விவசாய பீடத்திற்கு 24 மாணவர்களும், உயிரியல் விஞ்ஞானத்துறைக்கு 46 மாணவர்களும் பௌதிக விஞ்ஞானத் துறைக்கு 83 மாணவர்களும் முகாமைத்துவத் துறைக்கு 47 மாணவர்களும் கலைத் துறைக்கு 154 மாணவர்களும் வர்த்தகத் துறைக்கு 99 மாணவர்களும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் 92/93 ஆம் கல்வியாண்டில் இருந்த வெற்றிடங்களுக்காக 8 மாணவர்கள் உயிரியல் விஞ்ஞானத் துறைக்கும் 15 மாணவர்கள் பௌதிக விஞ்ஞானத் துறைக்கும் அனுமதி பெற்றுள்ளனர்.

## காமினி விவகாரத்தில் டி. பிக்கு பின்னடைவு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சரும், ஐ. தே. கவில் மீண்டும் இணைந்து கொண்டுள்ளவருமான காமினி திசாநாயக்கா பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு இடமளிக்கும் வகையில் பதவி துறப்பதற்கு ஐ. தே. கவின் தேசிய பட்டியல் மூலம் நியமனம் பெற்ற உறுப்பினர்கள் பதின்மூன்று பேரும் மறுப்புத் தெரிவித்துள்ளனர். இதனால் ஜனாதிபதி டி-பி-விஜேதுங்கா கட்சிக்குள் தனது செல்வாக்கை நிலை நிறுத்த எடுக்கும் முயற்சிகள் பெரும் பின்னடைவைக் கண்டுள்ளது வெளிப்படையாகிறது என்று பி-பி-ஸியின் கொழும்பு முகவர் ஜோர்ஜ் ஆர்னி தெரிவித்துள்ளார்-

இதே வேளை இன்று சிறி

(6ஆம் பக்கம் பார்க்க)

## உறங்கிக் கொண்டிருந்தவர் அதிரடிப்படையால் கொலை

பெரிய போர தீவு கிராமத்தில் கடந்த வெள்ளியன்று வீடு வீடாகச் சென்று தேடுதல் நடத்திய சிறிலங்கா அதிரடிப் படையினர் வீட்டு முற்றத்தில் உறங்கிக்கொண்டிருந்த தமிழர் ஒருவரை சுட்டுக் கொன்றுள்ளனர்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; வீட்டு முற்றத்தில் உறங்கிக் கொண்டிருந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான மு சோமசுந்தரம் (வயது 54) அதிரடிப்படையினரைக் கண்டு வீட்டுக்குள் செல்ல முயன்றார் என்றும் அப்போது சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்றும் தெரியவருகிறது

## இன்று படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும்என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## காமினிக்கு எம். பி பதவிக்காக 8 கோடி ரூபா பேரம் பேசப்பட்டது

(கொழும்பு)

காமினி திசாநாயக்க பாராளுமன்ற உறுப்பினராவதற்கு வசதியாக பதவி துறக்க முன்வருபவருக்கு எட்டுக்கோடி ரூபாவரை உபகாரம் செய்யப்படும் என்று ஆசை காட்டிய போதும் ஐ. தே. க பாராளுமன்ற உறுப்பினர்களில் எவரும்பெரும் ஆர்வம் காட்டவில்லை என கூறப்படுகின்றது காமினி திசாநாயக்காவை மீண்டும் பாராளுமன்ற உறுப்பினராக்க ஜனாதிபதி டி பி விஜேதுங்கா ஆர்வமாக இருக்கின்ற போதும் காமினி திசாநாயக்காவின் ஆதரவாளர்கள் முக்கிய பதவிகள் பலவற்றிற்கு நியமனம் செய்யப்பட்டுள்ள போதும் கூட பிரேமதாசவின் விசுவாசிகளான பலரும் காமினிதிசாநாயக்காவின் வருகைக்கு முட்டுக்கட்டை போட்டுவருகின்றனர்.

இதேவேளை பதவிகளை துறக்க முன்வந்த உறுப்பினர்கள் இருவர் தமது இடங்கள் திருமதி ஹேமா மற்றும் பிரேமதாசா குடும்பத்தினரால் நிரப்பப்படவேண்டும் என்று நிபந்தனை விதித்திருப்

(6ஆம் பக்கம் பார்க்க)

மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் இப்பல்கலைக் கழகத்தில் விவசாய பீடத்திற்கு 24 மாணவர்களும், உயிரியல் விஞ்ஞானத்துறைக்கு 46 மாணவர்களும் பௌதிக விஞ்ஞானத் துறைக்கு 83 மாணவர்களும் 92/93 ஆம் ... இருந்த வெற்றிடங்களுக்காக 8 மாணவர்கள் உயிரியல் விஞ்ஞானத் துறைக்கும் 15 மாணவர்கள் பௌதிக விஞ்ஞானத் துறைக்கும் அனுமதி பெற்றுள்ளனர்.

## உறங்கிக் கொண்டிருந்தவர் அதிரடிப்படையால் கொலை

பெரிய போரதீவு கிராமத்தில் கடந்த வெள்ளியன்று வீடு வீடாகச் சென்று தேடுதல் நடத்திய சிறிலங்கா அதிரடிப் படையினர் வீட்டு முற்றத்தில் உறங்கிக்கொண்டிருந்த தமிழர் ஒருவரை சுட்டுக் கொன்றுள்ளனர்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; வீட்டு முற்றத்தில் உறங்கிக் கொண்டிருந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான மு சோமசுந்தரம் (வயது 54) அதிரடிப்படையினரைக் கண்டு வீட்டுக்குள் செல்ல முயன்றார் என்றும் அப்போது சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்றும் தெரியவருகிறது

ஜனாதிபதி டி-பி- விஜேதுங்காவின் நடவடிக்கையில் அதிருப்திகொண்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களும், மற்றும் இதுவரை ஐ, தே, கட்சிக்கு விசுவாசமாகச் செயற்பட்ட உயர் பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட அரச அதிகாரிகளின் ஒரு பகுதியினருமே இவ்வாறு தீர்மானித்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன-

இதே வேளை ஆளும் கட்சி வெற்றி பெறுவதற்கு உதவ வேண்டாம் என தமது உறவினர், ஆதரவாளர்களிடமும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது இதனைத் தொடர்ந்து இச் செல்வாக்கு மிக்க அரசியல் வாதிகளின் வீடுகளைச் சோதனையிட பொலிசாருக்கு உத்தரவு இடப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதே சமயம், கடந்த 17 வருடங்களாக அரசாங்கத்திற்கு விசுவாசமாக இருந்த பொலிஸ் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு டி, பி. விஜேதுங்கா மேற்கொள்ளும் நடவடிக்கைகள் வெறுப்பை ஊட்டியுள்ளதாகவும் ... படுகின்றது பல பொலிஸ் அதிகாரிகள் அரசாங்கத்தின்

(6ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும்என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

... தேசிய பட்டியல் மூலம் நியமனம் பெற்ற உறுப்பினர்கள் பதின்மூன்று பேரும் மறுப்புத் ... துள்ளார்-

இதே வேளை இன்று சிறி

(6ஆம் பக்கம் பார்க்க)

# காமினிக்கு எம்.பி பதவிக்காக 8 கோடி ரூபா பேரம் பேசப்பட்டது

(கொழும்பு)

காமினி திசாநாயக்க பாராளுமன்ற உறுப்பினராவதற்கு வசதியாக பதவி துறக்க முன்வருபவருக்கு எட்டுக்கோடி ரூபாவரை உபகாரம் செய்யப்படும் என்று ஆசை காட்டிய போதும் ஐ. தே. க பாராளுமன்ற உறுப்பினர்களில் எவரும்பெரும் ஆர்வம் காட்டவில்லை என கூறப்படுகின்றது

காமினி திசாநாயக்காவை மீண்டும் பாராளுமன்ற உறுப்பினராக்க ஜனாதிபதி டி பி விஜேதுங்கா ஆர்வமாக இருக்கின்ற போதும் காமினி திசாநாயக்காவின் ஆதரவாளர்கள் முக்கிய பதவிகள் பலவற்றிற்கு நியமனம் செய்யப்பட்டுள்ள போதும் கூட பிரேமதாசாவின் விசுவாசிகளான டலரும் காமினிதிசாநாயக்காவின் வருகைக்கு முட்டுக்கட்டை போட்டுவருகின்றனர்.

இதேவேளை பதவிகளை துறக்க முன்வந்த உறுப்பினர்கள் இருவர் தமது இடங்கள் திருமதி ஹேமா மற்றும் பிரேமதாசா குடும்பத்தினரால் நிரப்பப்படவேண்டும் என்று நிபந்தனை விதித்திருப்

(6ஆம் பக்கம் பார்க்க)

# மேலும் 30 வகைப் பொருள்கள் வடபகுதிக்கு எடுத்துவர கட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

தடை செய்யப்பட்ட பொருள்களையும் மற்றும் தடைசெய்யப்படாத பொருள்களையும் யாழ்குடா நாட்டுக்கு எடுத்து வருவதற்கு இவ்வருடம் ஏப்ரல் 20ஆம் திகதி முதல் புதிய ஒழுங்கு முறைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன தடைசெய்யப்படாத பொருள்களை அத்தியாவசிய சேவைகள் ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியுடன் எடுத்துவர அனுமதிக்கப்பட்டுள்ளது

அனுமதிக்கப்படாத பொருள்களை வழமை போல் தேசிய பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை தலைமைச் செயலகத்தின் அனுமதியுடன்தான் யாழ் குடாநாட்டுக்குக் கொண்டு வலாம் என்று யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகருக்கு பாதுகாப்பு அமைச்சு அனுப்பியுள்ள சுற்று நிருபத்தில் தெரிவித்துள்ளது ஏப்ரல் 11ஆம் திகதியிட்டுப் பாதுகாப்பு அமைச்சு யாழ் அரச அதிபருக்கு அனுப்பியுள்ள அந்தச் சுற்று நிருபத்தில் முன்பு தடைசெய்யப்பட்ட பொருள்களுடன் மேலதிகமாகத் தடைசெய்யப்பட்ட 30பொருள்களின் விசேட பட்டியல் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது 1991 டிசம்பர் 09 அரச வர்த்தமானி இல 692இல் தடைசெய்யப்பட்ட பொருள்களுடன் மேலதிகமாக இந்தமுப்பது வகையான பொருள்களும் தடைசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

விசேட பட்டியலின் பிரகாரம் ஏற்கனவே தடைசெய்யப்பட்டுள்ள பொருள்களுடன் மேலதிகமாகத் தடைசெய்யப்பட்டுள்ள பொருள்களின் விபரம் வருமாறு: வீடியோ கமரா, வீடியோ கசட், கம்பியூட்டர், கமரா, படச்சுருள், ரின் உணவுவகைகள், பிஸ்கட் சொகிலட், தேங்காய் எண்ணெய், மரக்கறி எண்ணெய் படகு மற்றும் கண்ணாடி இழைப் படகுகள் திருத்துவதற்கான பசை, ஸ்பிரிட். பி. வி. சிபைப், படகு வெளி இணைப்பு இயந்திரம், கன்வெஸ் துணிவகைகள், நீர் மூழ்கு சாதனங்கள், ரபர் பான்ட்/ பலூன் / பிளாஸ்டிக் மழைசட்டைகள், சூரியஒளிச் சாதனம் எனாமல்பெயின்ற் அன்ரிகுறோசிவ் பெயின்ற், எமல்கலர்பெயின்ற்(கடும்நிறங்கள், அரிசி ஆலை உதிரிப்பாகங்கள் வயர்சுருள், சைக்கிள் செயின், ஓடியோ கசட், சம்பூ (எல்லா ரகமும்), ஆணிவகைகள், மண்ணெண்ணெய்/ எஞ்சின் ஒயில், சைக்கிள், ஜெனரேட்டர் / நீர்பம்பி மற்றும் (உதிரிப்பாகங்கள்), நெருப்புப் பெட்டி மற்றும் வேறு சந்தேகத்துக்குரிய பொருள்கள்.

## விபத்தில் மூவர் காயம்

இன்பருட்டி வீதியில் ஏற்பட்ட விபத்தொன்றில் மூவர் காயமடைந்தனர் இச்சம்பவம் நேற்று பகல் நடைபெற்றது

துவிச்சக்கர வண்டியும் மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் குடத்தனையைச் சேர்ந்த செ செல்வரூபன், மணற்காட்டைச் சேர்ந்த யோ பிறேமன், அ அருளானந்தம் ஆகியோரே காயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்

# வடபகுதிக்கு மருந்துகள் எடுத்துவர புதிய நடைமுறை அறிவிப்பு

## நடவடிக்கை தலைமை செயலக அனுமதி தேவை

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு மருந்து வகைகள் மற்றும் மருந்து பொருள்களை எடுத்து வருவதற்கு அனுமதி வழங்குவது தொடர்பான புதிய நடைமுறை ஒன்றை 1994 மே 16 ஆம் திகதி முதல் செயற்படும்படியாக தேசிய பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமைச் செயலகம் அமுல் படுத்தியுள்ளது.

இது தொடர்பாக 07-05-94 திகதியிட்ட சுற்று நிருபமொன்று யாழ் செயலகத்துக்கு தேசிய பாதுகாப்பு அமைச்சின் தலைமைச் செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி சுற்று நிருபத்தின் பிரகாரம்-

வடபகுதிக்கு எடுத்து வரப்படும் அனைத்து மருந்துப் பொருள்களுக்குமான விண்ணப்பங்கள் நடவடிக்கைத் தலைமைச் செயலகத்தின் மருந்துக் குழுவினால் அங்கீகரிக்கப்பட வேண்டும் அதன் பிறகு விண்ணப்பங்கள் அத்தியாவசிய சேவைகள் ஒருங்கிணைப்பு குழுவினால் தேசிய பாதுகாப்பு அமைச்சின் தலைமைச் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் அத்தியாவசிய சேவைகள் ஒருங்கிணைப்புக் குழு தனியார் மருத்துவமனைகளின் பதிவு, அரச அதிபரின்சிபாரிசு போன்றவற்றையும் பரிசீலனை செய்யும்

அரச மருத்துவ மனைகள் பல்கலைக்கழகங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளின் ஊடாகத் தமது விண்ணப்பங்களை நடவடிக்கைத் தலைமைச் செயலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் திணைக்களங்கள், விண்ணப்பங்களைச் சரிபிழை பார்த்துத் தேவைப்படும் மருந்து வகையின் தொகையைச் சிபார்சு செய்து அந்த விண்ணப்பங்களை நடவடிக்கைத் தலை

(6ஆம் பக்கம் பார்க்க)

# பாராளுமன்றத்தில் புதிய முகங்கள் காமினி குறித்து முடிவு எதுவுமில்லை

## ஐ. தே, க. செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் காமினி திசாநாயக்காவை பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்வது குறித்து கட்சிஇன்னமும் முடிவு செய்யவில்லை எனவும் ஆனால் சில புதியமுகங்களை பாராளுமன்றத்தில் விரைவில் காணமுடியும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் காமினி விஜேசேகரா தெரிவித்துள்ளார். லங்கா தீப' பத்திரிகைக்கு அவர் வழங்கிய பேட்டியிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் தான் நடத்திய பேச்சுவார்த்தைகள் தொடர்பாக முழு நாடும் விரைவில் தெரிந்து கொள்ளும் எனவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் தற்போதைய நிலையில் இது தொடர்பான விபரங்களை வெளியிட முடியாது என்றும் தற்போது இவ் விபரங்கள் ஜனாதிபதியின் கவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் இன்னும் மூன்று தினங்களில் இது குறித்து அறிவிப்பதாகவும் கூறினார்

இதேவேளை காமினி திசாநாயக்கா தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஆக தெரிவு செய்யப்படுவாரா? என 'லங்கா தீப' பத்திரிகையாளர் கேட்டத

(6-ம் பக்கம் பார்க்க)

# ஐ. தே. கவிற்கே சொத்தி உபாலியின் செல்வாக்கு தேவைப்பட்டது

## அமைச்சர் கூரே கூறுகிறார்

(கொழும்பு)

சொத்தி உபாலி ஒரு கிரிமினல் குற்றவாளி என்றும் அவருக்கும் பல கொலைகளுக்கும் தொடர்பு இருப்பதாக தனக்குத் தெரியும் என்றும் அதனால் தான் எந்தச் சமயத்திலும் பொலிஸ் விசாரணைக்கோ அன்றி பொலிஸ் நடவடிக்கைக்கோ தனது செல்வாக்கை செலுத்தவில்லை எனவும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன கூரே தெரிவித்துள்ளார்.

சொத்தி உபாலியின் செல்வாக்குத்தான் கட்சிக்குத் தேவைப்பட்டதே தவிர தனது செல்வாக்கை தான் எந்தக் கட்டத்திலும் இவருக்காக பயன்படுத்த வேண்டிய தேவை இருக்கவில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்க விரும்புவதாக கூரே மேலும் தெரிவித்துள்ளார்.

## உபாலி சரணா? கைதா? அதிகாரிகளிடையே குழப்பம்

(கொழும்பு)

பாதாள உலக மன்னன் சொத்தி உபாலி கைது செய்யப்பட்டாரா? அல்லது பொலிஸ் விசேட குழுவிடம் சரணடைந்தாரா? என்பது குறித்து குற்றபுலன் விசாரணைப் பிரிவினர் சந்தேகம் எழுப்பியுள்ளனர்

மேற்படி நபர் பிடிபட்ட விடயம் தொடர்பாக கண்டி பொலிஸ் அத்தியட்சகர் பிரிவினர் அனுப்பிய அறிக்கைக்கும் கைது செய்த விசேட பொலிஸ் குழுவின் அதிகாரிகள் அனுப்பியுள்ள அறிக்கைக்கும் இடையே வேறுபாடு காணப்படுவதாககுற்றப்புலன் விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது

இதேவேளை தற்போது

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## வரி விளம்பரம்

### தவறி விட்டது

14 05-94 இரவு இருபாலைச் சந்திக்கும் புத்தூர் சந்திக்கும் இடையில் நோட்ஸ் கொப்பிகளுடன் Bag (பாக்) தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பின்வரும் முகவரிகளில் ஒப்படைக்கவும் ஆகன் கல்வி நிறுவனம் ஆவரங்கால், விங்ஸ் இல்க் ஹவுஸ் யாழ்ப்பாணம். முகவரி கந்தசாமி சிவகுமார் மணற்பகுதி புத்தூர் (8301)

### விற்பனைக்கு

நல்லின இரண்டு மாத சேவல் குஞ்சுகளும் (விறாத்து நிலைக்குரியவை) பேட்டுக் குஞ்சுகளும் இறைச்சிக்கோழிகளும் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்- தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மேஜர் பிரதாப் செட்டி பண்ணை இராஜ வீதி, கோப்பாய்- (சி 9439)

### உடன் தேவை

8அடி நீளமும் 10 அடிக்குள்ளும் கடைச்சல் பட்டடை (லேத்) அல்லது மினி லேத் விற்பனைக்கு வைத்திருப்பவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு. துரை மோட்டார் உயிரூட்டகம், பருத்தித்துறை வீதி, கொடிகாமம். (சி 9431)

### விற்பனைக்கு

8×4 சதுரஅடி ஒன்றரை நூல் தடிமன் இரும்புத்தகடு. 8×8×4 கனஅடி, 4×4×4 கனஅடி தண்ணீர்த் தாங்கிகள் என்பன விற்பனைக்கு உள்ளன- தொடர்பு 525/2, கே கே எஸ் வீதி, யாழ்ப்பாணம்- (சி 9436)

### தவறிவிட்டது

18 4-94 அன்று தா-சுப்பிரமணியம், சுப்பிரமணியம் கனகாம்பதி (இல 270430324V 378300274V) ஆகிய இருவரது அடையாள அட்டைகள் மானிப்பாய்க்கும்- அச்சுவேலிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும், [8302]

## முதலிடம் பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

சுவாமி விவேகானந்தரின் 'சிக்காகோ' பிரசங்க நூற்றாண்டு விழாவையொட்டி திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயம் ஒழுங்கு செய்து யாழ் - கல்வித்திணைக்களம் நடாத்திய பேச்சுப் போட்டியில். ஊர்காவற்றுறை கோட்டத்தில் நாவற்குழி லவனிதா குடியிருப்பில் இயங்கும் நாரந்தனை கணேச வித்தியாலய மாணவி செல்வி க. சைலஜா கீழ்ப்பிரிவு பெண்கள் போட்டியில் முதலாம் இடத்தையும், மாணவன் செல்வன் நா. மணிமாறன் 'மத்திய பிரிவு ஆண்கள்' போட்டியில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளனர். (22)

## வயோதிபர் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

செட்டிசீமிய விற்கு கைதடி வயோதிபர் இல்லத்தில் ஒருவர் பலியாகியுள்ளார்-

எஸ்- ராமசாமி என்கின்ற வயோதிபரே மேற்படி செட்டிசீமியா விற்குள்ளாகி பலியானவராவார்-

இச்சம்பவம்கடந்த இரண்டு வாரங்களிற்கு முன்னர் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது- (பா),(தி)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

பட்டப்பின் படிப்பிற்குப் பதிவு செய்தல்- 1994

(கலாநிதி, முதுமெய்யியல் மாணி)

யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தின் 1993 / 94ம்

# கைதான 22 பேரை விடுவிக்க உரிமை மீறல் வழக்கு

(மட்டக்களப்பு)

கடந்த ஆண்டு கிழக்கு மாகாணத்தில் காரணம் ஏதுமின்றி படையினரால் கைதாகி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படாது மட்டு நகர் சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் 22 தமிழ்க்கைதிகள் தமது விடுதலை வேண்டி பிரதம நீதியரசருக்கு விண்ணப்பித்ததன் பேரில் சட்டத்தரணிகள் சங்கத்தின் மனித உரிமை நிலையம் மேற்படி 22 கைதிகள் சார்பிலும் அடிப்படை உரிமை மீறல் வழக்குத்தாக்கல் செய்ய கைதிகளின் கையெழுத்தை அவர்களின் சத்தியக்கடதாசியில் பெற்றுள்ளது.

இந்த 22பேரில் அதிககாலம் தடுத்துவைக்கப்பட்டிருப்பவர் பி. சத்தியசீலன் 27 1 1993இல் கைதானார். மிகக் குறைந்த காலம் இருப்பவர் 4.1 1994இல் கைதான கே. மிருகண்டன். 22பேரில் காத்தான்குடியைச் சேர்ந்த முருகுப்பிள்ளை கிருபேந்திரன் (17) தமது சத்தியக் கடதாசியில் தமக்கு ஏற்பட்ட சித்திரவதைகளை விபரித்துள்ளார். அதில், " எனக்கு 17 வயது ஆறுபேர் கொண்ட குடும்பத்தை கூலி வேலை செய்து நானே காப்பாற்றி வந்தேன் 18.4 1993 இல் நண்பகல் நான் காத்தான்குடி நகரில் இருந்தேன் அப்போது மட்டுநகர் பொலிஸ் பாதுகாப்பு ஒன்றிணைப்பு பிரிவு சார்ஜண்ட் கதிர்காமன் உட்பட பல அதிகாரிகள் வந்து என்னை காரணம் எதுவும் கூறாமல் கைது செய்தனர். என்னை மட்டுநகர் பொலிசைச் சேர்ந்த காட்டு இலாகா கட்டிட முகாமிற்குகொண்டுசென்றனர்.

எனக்கு அறிமுகமில்லாத அதிகாரிகள் என்னை நிர்வாணமாக்கினர். பெற்றோல் நிரப்பப்பட்ட பொலித்தீன் பையை எனது தலையில் போட்டு கழுத்தில் கட்டினர் நான் மயங்கினேன் பின் என்னை தண்ணீர் தொட்டி ஒன்றில் போட்டு மூழ்கடித்தனர் நான் மீண்டும் மூர்ச்சை இழந்தேன் இந்தச் செயல்களினால் இப்போதும் சுவாசிப்பது கடினமாக உள்ளது எனது உறுப்புகளில் நைலோன் கயிறுகளை கட்டி இழுத்தனர்.

அந்த காட்டு இலாகாவில் 8 மாதங்கள் தடுத்து வைத்த பின்னர் பொலிஸ் தலைமைக் காரியாலயத்திற்கு மாற்றி இன்று வரை தடுத்து வைத்துள்ளனர். எனக்கு இழைக்கப்பட்ட சித்திரவதைகள் பொலிசாரால் குரூரமாக மேற்கொள்ளப்பட்டது. நான் முன்னர் குற்றங்கள் புரிந்தவனல்ல என குறிப்பிடப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு அதிகாரியான

## போலி முகவரிடம் பணத்தை இழந்தனர்

(கொழும்பு)

மகனை வெளிநாடுஅனுப்ப கொழும்பு சென்ற யாழ்வாசி ஒருவர் போலி முகவரிடம் தனது 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபாவை பறிகொடுத்தார். எதுவித சாட்சியமும் இன்றி தமக்கு முன்னர் பரிச்சயமில்லாத இந்த நபரிடம் பணத்தை கையளித்துவிட்டு விடுதி ஒன்றில் தந்தையும் மகனும் தங்கியிருந்தனர்.

விசாவரும் என நாள்களை எண்ணிக்கொண்டிருந்த இவர்கள் ஏமாற்று நபரினால் தொடர்ந்து ஏமாற்றப்பட்டு இறுதியில் அந்நபர் கையை விரித்துவிட்டாராம்

இந்நபர் சுகாதார அமைச்சில் உயர் பதவியொன்றில் இருக்கும் தமிழர் என பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

மக்கள் வங்கி கிளையை

## பருத்தித்துறையில் இயங்க எடுத்த முயற்சி பயனில்லை

(வடமராட்சி)

பருத்தித்துறை மக்கள் வங்கிக் கிளை கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக நெல்லியடியில் இயங்கி வருகிறது. இவ்வங்கிக் கிளையை மீண்டும் பருத்தித்துறைப் பகுதியில் செயற்பட பல முயற்சிகள் எடுக்கப்பட்டபோதிலும் இன்னமும் பயனளிக்கவில்லை

நெல்லியடியில் தற்போது இரண்டு மக்கள் வங்கி கிளைகள் இயங்கிவருகின்றன, நெல்லியடி வங்கிக் கிளையிலேயே பருத்தித்துறை கிளையும் இயங்கி வருகிறது

பருத்தித்துறை பிரதேசத்திற்கு அப்பால் நெல்லியடியில் இயங்கும் இக்கிளையில் அப்பகுதி மக்கள் தமது அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பல கஷ்ட நிலைகளை எதிர்நோக்கி வருகின்றனர். (யோ)

## அதிபர்கள் கூட்டம்

வேலணை. ஊர்காவற்துறை கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த அதிபர்களுக்கான கூட்டம் இன்று காலை பத்து மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டம் பிற்பகல் 3 00 மணிக்கு யாழ் புங்குடுதீவு ம. வியில் நடைபெறும் என்று முன்னரே அறிவிக்கப்பட்டிருந்தது என்பதும், அக் கூட்டம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது

## சமுகமளிக்கவும்

சண்டிலிப்பாய் மற்றும் தெல்லிப்பழை கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் 1-02 89 திகதி முதல் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றி இதுவரை நியமனம் பெறாதவர்கள் அனைவரையும் நாளை காலை ஒன்பது மணியளவில் மானிப்பாய் இந்துக்கல்லூரி

## 16 மாணவர் சித்தி

(பருத்தித்துறை)

யாழ். கல்வித்திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவி

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

இ: 17 5 1994



# ஒருபகுதி உணவு முத்திரை குமாரி கப்பலில் வரும்?

[யாழ்ப்பாணம்]

இடம்பெயர்ந்தவர்களுக்கான இலவச நிவாரண உணவு முத்திரைகளின் ஒரு தொகுதி குமாரி கப்பலில் தற்சமயம் ஏற்றப்பட்டுள்ளதாக யாழ்- செயலக புனர்வாழ்வுப் பகுதி திட்டப்பணிப்பாளர் இதனைத் தெரிவித்தார்,

இக்கப்பல் இன்னமும் சில நாட்களில் கொழும்பில் இருந்து பருத்தித்துறை நோக்கிப் புறப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் முத்திரைகள் இன்றி உலர்உணவுப் பொருள்கள் வழங்கலினால் சிக்கல்கள் தோன்றக் கூடிய நிலை உள்ளதால் இது பற்றி தாம் தீர்மானித்து ஒரு முடிவு எடுப்பதாக தெரிவித்தார்.

இது இவ்வாறு இருக்க கடந்த மார்ச் மாதம் வரையே மேற்படி இடம் பெயர்ந்தோர் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. [பா,தி]

## இல்லப் போட்டி

(பருத்தித்துறை)

வடமராட்சிகிழக்கு ராஜன் நகரிலுள்ள அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் ஆரம்ப பாடசாலையின் இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டி தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் நாளை 18-ம் திகதி அதிபர் திரு. மு. சிறீஸ்கந்தராசா தலைமையில் நடைபெறுகின்றது. (25)

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ் கோட்டம்

சகல பொதுச்சபை உறுப்பினர்களுக்குமான

## முக்கிய அறிவித்தல்

யாழ் கோட்டம் பொதுச்சபைக் கூட்டம், முக்கிய விடயங்கள் தொடர்பான ஆலோசனைக்காக 18-05-94 புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு ' புதிய விஞ்ஞான கல்வி நிலையத்தில்'' (எழிலகம் முன்பாக) நடைபெறவுள்ளது. சகல கல்வி நிறுவனங்களினதும் இயக்குநர்களும், பிரத்தியேக வகுப்பு நடத்துபவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

செயலாளர்

(சி-9437) யாழ் கல்விக் கோட்டம்

## நினைவு கூருகின்றோம்..

## 17.05.1994

1985-ம் ஆண்டு இத்தினத்தில் வீரச்சாவெய்திய

❋ மதன் (ம. பரமேஸ்வரன்-கல்முனை-அம்பாறை)

நற்பிட்டிமுனையில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு தம்பட்டையில் வைத்துக் கொலை செய்யப்பட்ட

❋ முரளி (— முரளிதரன்-கல்முனை - அம்பாறை)

1986-ம் ஆண்டு கிளி-ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய.

(கனகசபை கிருபாகரன்-சூட்டி வீதி, மாசார்-

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

**பட்டப்பின்
படிப்பிற்குப்
பதிவு செய்தல்-
1994**

**(கலைநிதி, முதுமெய்யியல்மாணி)**

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் 1993 / 94ம் கல்வியாண்டில் பின்வரும் பாடநெறிகட்கு, பட்டப்பின் படிப்பிற்கான தகுதி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

பொருளியல், கல்வியியல் புவியியல், இந்துநாகரிகம் அரசியல் கிறிஸ்தவ நாகரிகம், வரலாறு, வர்த்தகம், தமிழ் மெய்யியல் சமஸ்கிருதம்மொழியியல் நுண்கலை நாடகமும் அரங்கியலும், சித்த மருத்துவம்.

இக்கற்கை நெறி தொடர்பான விண்ணப்பங்களை நேரில் பெற விரும்புவோர். நிதிக்கிளையில் ரூபா 20/- செலுத்திப் பற்றுச்சீட்டினைக்கல்விக்கிளை, சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்

தபால் மூலம்பெறவிரும்புவோர் நிதியாளர், யாழ் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 20/- இற்கான காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளையுடன் ரூபா 8/- பெறுமதியுள்ள முத்திரை ஒட்டிச் சுயவிலாசமிடப்பட்ட தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 1994 06.27ம் திகதிக்கு முன்பாக சிரேஷ்ட உதவிப் பதிவாளர் கல்விக்கிளை, யாழ்பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். 1994 06.27ம் திகதிக்குப்பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

பதிவாளர்
யாழ் பல்கலைக்கழகம்.
(சி-9420)

## ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

செப்டிசீமிய விற்கு கைதடி வயோதிபர் இல்லத்தில் ஒருவர் பலியாகியுள்ளார்-

எஸ்- ராமசாமி என்கின்ற வயோதிபரே மேற்படி செப்டிசீமியாவிற்குள்ளாகி பலியானவராவார்-

இச்சம்பவம்கடந்த இரண்டு வாரங்களிற்கு முன்னர் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது- (பா), (தி)

ளமும் பயனளிக்கவில்லை

நெல்லியடியில் தற்போது இரண்டு மக்கள் வங்கி கிளைகள் இயங்கிவருகின்றன, நெல்லியடி வங்கிக் கிளையிலேயே பருத்தித்துறை கிளையும் இயங்கி வருகிறது

பருத்தித்துறை பிரதேசத்திற்கு அப்பால் நெல்லியடியில் இயங்கும் இக்கிளையில் அப்பகுதி மக்கள் தமது அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பல கஷ்ட நிலை

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

**திதி: 17 5 1994**



**அமரர் சண்முகநாதன்-விக்கிரமசிங்கம்**
**(வளர்மதி ஸ்ரேர்ஸ் காங்கேசன்துறை)**

மலர்வு
25 4-1944

உதிர்வு
27-5 1993

எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டு பிரிந்து ஓராண்டு சென்றாலும், எங்களுடன் இருப்பது போன்ற பிரமையில் தான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் உங்களைப் பிரிந்த துயர் தீராது தவிக்கின்றோம் உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இன்று (17 5 94) எமது இல்லத்தில்நடைபெறும்மதிய போசனத்தில் கலந்துகொள்ளுமாறு உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

ஆடியபாதம் வீதி
கொக்குவில் மேற்கு.
கொக்குவில்.

மனைவி, பிள்ளைகள்,
தாய், உறவினர்கள்,

(8303)

...கூட்டம் இன்று காலை பத்து மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டம் பிற்பகல் 3 00 மணிக்கு யாழ் புங்குடுதீவு ம. வியில் நடைபெறும் என்று முன்னரே அறிவிக்கப்பட்டிருந்தது என்பதும், அக்கூட்டம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது

## சமூகமளிக்கவும்

சண்டிலிப்பாய் மற்றும் தெல்லிப்பழை கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் 1-02 89 திகதி முதல் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றி இதுவரை நியமனம் பெறாதவர்கள் அனைவரையும் நாளை காலை ஒன்பது மணியளவில் மானிப்பாய் இந்துக்கல்லூரியிலுள்ள கோட்டக் கல்விப் பணிமனைக்கு சமூகமளிக்கும்படி கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## மாவுடன் மாகோ

திருகோணமலையிலிருந்து ஒரு தொகுதி மாவுடன் புறப்படும் 'மாகோ' என்ற கப்பல் இன்று பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து சேரும்-

## பயிற்சி நெறிகள்

கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவு கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் பாடசாலைகளினதும், பாலர் பாடசாலைகளினதும் கற்பித்தல் உபகரணங்கள் தயாரித்தல் பயிற்சி நெறியையும், உடையமைத்தல் பயிற்சிநெறியையும் ஆரம்பிக்கவுள்ளது. பாடசாலையை விட்டு வெளியேறிய க. பொ- த- (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்த இருபாலாரும் இப்பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாமென்றும் பாடசாலைகளினதும் பாலர் பாடசாலைகளினதும் கற்பித்தல் உபகரணங்கள் தயாரித்தல் பயிற்சிநெறிக்கு ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது- பயிற்சி நெறிகள் பற்றிய ஏனைய விபரங்களைக் கல்லூரி அதிபரிடம் பெற்றுக் கொள்ளலாமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஃ ஃ

கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவு வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களுக்கான ''வானொலிதிருத்தும் பயிற்சி'' நெறியை ஆரம்பிக்கவுள்ளது- இப்பயிற்சி நெறியில் பயிற்சிகளை பெற்றுக் கொள்ள விரும்பும் இளைஞர்கள் கல்லூரி அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது- (25)

போதும் சுவாசிப்பது கடினமாக உள்ளது எனது உறுப்புகளில் நைலோன் கயிறுகளை கட்டி இழுத்தனர்.

அந்த காட்டு இலாகாவில் 8 மாதங்கள் தடுத்து வைத்த பின்னர் பொலிஸ் தலைமைக் காரியாலயத்திற்கு மாற்றி இன்று வரை தடுத்து வைத்துள்ளனர். எனக்கு இழைக்கப்பட்ட சித்திரவதைகள் பொலிசாரால் குரூரமாக மேற்கொள்ளப்பட்டது. நான் முன்னர் குற்றங்கள் புரிந்தவனல்ல என குறிப்பிடப்பட்டுள்ளது.

## 16 மாணவர் சித்தி

(பருத்தித்துறை)

யாழ். கல்வித்திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவினால் கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் 1992-ம் ஆண்டு நடாத்தப்பட்ட உடையமைத்தல் பயிற்சி நெறியில் 11 மாணவிகளும், மின் இணைப்பு மரத்தளபாட உற்பத்தி பயிற்சி நெறியில் 05 மாணவர்களும் சித்திபெற்றுள்ளனரென கல்வித் திணைக்கள முறைசாராக்கல்விப் பிரிவு அறிவித்துள்ளது. (25)

## பாடசாலை உபகரணம் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மாணவர்களுக்கு யுனிசெப் நிறுவனம் ஒரு தொகுதி மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களை வழங்கியுள்ளது

சுமார் 14000 ரூபா பெறுமதியுடைய மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் இவை என தெரிவிக்கப்பட்டது

இப் பொருட்கள் குமாரி கப்பலில் தற்சமயம் ஏற்றப்பட்டுள்ளதாக யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (பா) (தி)

## சென். அன்ரனீஸ் சம்பியனாகியது

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்தப்பட்டு வருடாந்த மெய்வல்லுநர் போட்டியில் சம்பியனாக தாழையடி சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் தெரிவு செய்யப்பட்டது.

இப்போட்டியில் இரண்டாவது இடத்தை மாமுனை கலைமகள் விளையாட்டுக் கழகமும், மூன்றாவது இடத்தை ஆழியவளை கொடுக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக் கழகமும் பெற்றது. (36)

## நினைவு கூருகின்றோம்..

## 17.05.1994

1985-ம் ஆண்டு இத்தினத்தில் வீரச்சாவெய்திய

❋ **மதியன்** (ம. பரமேஸ்வரன்-கல்முனை-அம்பாறை)

நற்பிட்டிமுனையில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு தம்பட்டையில் வைத்துக் கொலை செய்யப்பட்ட

❋ **முரளி** (— முரளிதரன்-கல்முனை - அம்பாறை)

1986-ம் ஆண்டு கிளி-ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய.

**சூட்டி** (கனகசபை கிருபாகரன்-சூட்டி வீதி, மாசார்-பளை)

ஊர்காவற்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**அலெக்ஸ்/அரு** (நாகலிங்கம் அரிகரன்- 11-ம் வட்டாரம், புங்குடுதீவு யாழ்)

**நிதி** (தில்லையம்பலம் சிவசிகாமணி-4 ம் வட்டாரம், நயினதீவு-யாழ்)

1988-ம் ஆண்டு காரைதீவுப்பகுதியில் தேசவிரோதசக்திகளுடனான சமரின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய.

**இரசாத்** (- - காரைதீவு-03 அம்பாறை)

மல்லாவியில் வயலில் வேலைசெய்து கொண்டிருந்தபோது இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் காயமுற்று யாழ் மருத்துவமனையில் பலியான தமிழ் விவசாயி.

1989-ம ஆண்டு யாழ் கொக்குவில், செருக்கன்புலம் பகுதியில இந்தியப்படையினருடனான சமரின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**இளங்கோ** (நடராசா ஜெயகரன்-கோண்டாவில் வடக்கு-யாழ்)

இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பெண் மற்றும் அத்தியார் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன்.

புன்னாலைக்கட்டுவனில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட இளம்பெண் உட்பட 02 தமிழர்கள்-

1991ஆம் ஆண்டு முல்லைத்தீவில் மிதிவெடியில் சிக்கியதில் வீரச்சாவெய்திய,

**லெப். ரஞ்சன** (மு. சுபாஸ்கர் - நெடுங்கேணி-மணலாறு)

1992ஆம் ஆண்டு மட்டு-குருமண் பகுதியில் தேசவிரோதசக்திகளின் சுற்றிவளைப்பில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**அருணமணி-பூனி** (தங்கத்துரை பிறேமச்சந்திரன் - [illegible]பத்துவில் - அம்பாறை)

மட்டு - மயிலம்பாவெளியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய,

**2 ம் லெப். புஸ்பமாறன் [illegible]**
(சின்னத்துரை சந்திரன் - வாழைச்சேனை - மட்டு)

**லோகிதகுமார்-பிரபு** (கந்தப்போடி மாணிக்கவாசகம் - மயிலம்பாவெளி - மட்டு)

**ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.**

❋ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்கள்-

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-9435)

Nallur Branch Library

## உட்கட்சிப் பூசலை தீர்க்க ஜனாதிபதி தீவிர முயற்சி

(கொழும்பு)

அரசாங்க கட்சிக்குள் இருக்கும் பூசல்கள், பிரச்சினைகள் கருத்து வேறுபாடுகள் ஆகியவற்றை தீர்த்து வைப்பதில் ஜனாதிபதி டி. பி விஜேதுங்கா தற்போது தீவிர கவனம் செலுத்தி வருவதாகக் கூறப்படுகிறது

மாவட்ட ரீதியில் அரசாங்க கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து தனிப்பட்ட விவகாரம், கட்சி விவகாரம் ஆகியவற்றின் காரணமாக எழுந்துள்ள பூசல்கள், பிரச்சினைகள், வேற்றுமைகள் பற்றிப் பேசி அவற்றை அகற்றுவதில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார்

எதிர்நோக்கப்படும் தேர்தல்கள் பற்றியும் பா. உக்களிடம் சுட்டிக்காட்டி வரும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா வெற்றியை இலக்காகக் கொண்டு செயலாற்றுமாறும் கேட்டுவருகிறார்

## தேர்தல் ஆணையகம்; யோசனை கைவிடப்பட்டது

(கொழும்பு)

இந்தியாவைப் போல ஓய்வு பெற்ற மூன்று நீதியரசர்களைக் கொண்ட தேர்தல் ஆணையகம் ஒன்றை நிறுவும் யோசனையை சிறிலங்கா அரசு கைவிட்டுள்ளது.

தேர்தல் ஆணையகம் ஒன்றை நிறுவுவது பற்றி அரசாங்கம் சமீப காலமாக ஆராய்ந்து வந்தது. ஆனால் இப்பொழுது அந்த யோசனை கைவிடப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையகம் நிறுவப்படுவதற்கு பதிலாக தேர்தல் கால குற்றச் செயல்களுக்கு மாஜிஸ்ரேட் நீதிமன்றங்கள் மூலம் கூடுதல் தண்டனை வழங்குவதற்கு ஏற்பாடு செய்வது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## 73ஆவது பிறந்ததின வாழ்த்து



### தம்பு சிவசம்பு

மீசாலை வளைகுடாப் பகுதியைச் சேர்ந்த காலஞ்சென்ற பெரியதம்பி கந்தவனம் தம்புவினதும், நாகர் சடையர் சின்னாட்சியினதும் அன்பு மகன், சிவசம்பு அவர்கள் தனது 73 வது பிறந்ததினத்தை இன்று நினைவு கூருகிறார்.

கண்டி வீதி,
மீசாலை தெற்கு (சி 9429)

## 1-வதுபிறந்தநாள்வாழ்த்து



புத்தளம் சேராக்குளியில்

# மீனவர் மீதான தாக்குதல் பொலிசாரே பின்னணியில்

(கொழும்பு)

புத்தளம் சேராக்குளி மீன்பிடிக் கிராமத்தில் முஸ்லிம் மீனவர் படகுகள், மோட்டார்கள், வாடிகள், வலைகள் எரிக்கப்படுவதற்கு பின்னணியில் பொலிசாரே இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ தினம் இரவு 2 மணியளவில் இந்த தீவைப்பு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. பெற்றோல் குண்டுகள்வீசியே இவை எரிக்கப்பட்டதாக மீனவர்கள் தெரிவித்தனர். சம்பந்தப்பட்டோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதுடன் ஏற்பட்ட சேதங்களுக்கு நட்டஈடு வழங்க வேண்டும் என்றும் இவர்கள் கேட்டுக்கொண்டனர். எரிக்கப்பட்ட மீன்பிடி வலைகளின் தொகை 2000 எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிங்கள மீனவர் ஒருவர் தாக்கப்பட்டதற்கு பழிவாங்கவே பொலிசார் இந்நடவடிக்கையில் இறங்கியிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## குருநகர் மீன்வாடி ஞாயிறுகளில் திறக்கப்படும்

(நல்லூர்)

குருநகர் கடற்கரையில் அமைந்துள்ள மீன்வாடி ஞாயிற்றுக்கிழமைகளில் திறந்து வைக்கப்படும் என குருநகர் கடற்தொழில் அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துள்ளது. இம் மீன்வாடி ஏனைய நாட்களிலும் மீன்வியாபாரத்துக்கென திறந்தே உள்ளது ஆனால் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் குருநகரில் தொடர்ந்து சிறிலங்கா அரசினால் உருவாக்கப்பட்ட பேரழிவினால் இங்குள்ள நான்கு கடற்றொழில் சங்கங்களும் ஞாயிற்றுக்கிழமைகளில் மீன்பிடித்தொழிலுக்குச் செல்லக்கூடாதென எடுத்தமுடிவினால் இம்மீன்வாடியில் ஞாயிற்றுக்கிழமைகளில் மீன் விற்பதும் தடை செய்யப்பட்டதால் இம் மீன்வாடி ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும இயங்காமலேயே இருந்தது.

ஆனால் குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம், குருநகர் இழுவைறால்சங்கம், குருநகர் சிறகுவலை அபிவிருத்திச் சங்கம், குருநகர் குத்தகையாளர் சங்கங்கள் இணைந்து மேற்கொண்ட இவ் ஞாயிற்றுக் கிழமை மீன் பிடித்தடையை குருநகர் சிறகு வலை அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்கள் சிலர் ஞாயிற்றுக்கிழமையிலும் மீன்பிடிக்கச் சென்றதினால் இம்முடிவை தற்காலிகமாக நீக்கி அனைத்து தொழிலாளர்களையும் மீன்பிடிக்கச் செல்லுமாறு இம் மூன்று சங்கங்கள் கேட்டுள்ளன. அத்துடன் இம் மீன்வாடியும் ஞாயிற்றுக்கிழமையிலும் பழைய இடத்தில் தொடர்ந்தும் இயங்கும் எனவும் இச்சங்கங்களின் சார்பில் குருநகர் கடல் தொழில் அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துள்ளது. (17)

## 75 தமிழ்க் குடும்பங்கள் படையினரால் விரட்டியடிப்பு

(மட்டக்களப்பு)

உன்னிச்சைப் பகுதியில் அகதிகளாக மீளக்குடியேற்றிய 75 குடும்பங்கள் அப்பகுதி சிறிலங்கா இராணுவத்தினரால் உடனடியாகவே வெளியேற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

கடந்த சனியன்று உன்னிச்சை 8ஆம் கட்டைக் கிராமத்தில் அகதிகளாக இருந்து மீளக்குடியேற்றப்பட்ட 75க்கு மேற்பட்ட குடும்பங்களையே உன்னிச்சை இராணுவத்தினர் உடனடியாக வெளியேறுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளனர்

இராணுவத்தினரின் உத்தரவையடுத்து அம்மக்கள் அங்கிருந்து வெளியேறி வேறு இடங்களுக்குச் சென்றுகொண்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன

## கொலைமுயற்சி தொடர்பாக அடையாள அணிவகுப்பு

(கொழும்பு)

தென்மாகாணசபை அவைத் தலைவரான அபேவர்த்தனா தனது வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் இவரது வ[illegible]னம் மீது இனந்தெரியாதோர் துப்

## விவசாய வகுப்புகள்

விவசாய அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்குடன் விவசாய போதனாசிரியர் பிரிவு ரீதியாக விவசாயப் பயிற்சி வகுப்புக்களை நடாத்த தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் விவசாயத் திணைக்களமும் இணைந்து நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன.

இந்த வகையில் எதிர்வரும் 19ஆம் திகதி உடுவில் பிரிவில் பிற்பகல் 2 மணிக்கு கந்தரோடை கந்தையா வித்தியாசாலையிலும், பளைப்பிரிவில் பிற்பகல் 3 மணிக்கு மாசார் கிராம அபிவிருத்திச் சங்கத்திலும் 20ஆம் திகதி பளைப் பிரிவில் காலை 10 மணிக்கு சேரன்பற்று கிராம அபிவிருத்திச் சங்கத்திலும் புலோலிப் பிரிவில் மாலை 3 மணிக்கு தம்பசிட்டி பாடசாலையிலும் நல்லூர்ப் பிரிவில் சாதனா பாடசாலையிலும், 26 ஆம் திகதி காலை 10 மணிக்கு தொல்புரம் பிரிவில் தொட்டிலடி கல்வி நிலையத்திலும், கைதடிப்பிரிவில் கைதடி மத்தி சந்திபுரம் சிவன் கோவிலடி சனசமூக நிலையம் ஆகிய இடங்களிலும், 31ஆம் திகதி மாலை 3 மணிக்கு சண்டிலிப்பாய் சனசமூக நிலையத்திலும் சாவகச்சேரிப் பிரிவில் காலை 9-30 மணிக்கு மீசாலை ஐ. நா. சங்க சனசமூக நிலையத்திலும் இப் பயிற்சி வகுப்பை நடாத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாதாந்தம் தொடர்ச்சியாக நடைபெறவிருக்கும் இப்பயிற்சி வகுப்புக்களில் சகல விவசாயிகளையும் உற்பத்திக் குழுக்களையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செய்திக் குறிப்பொன்றின் மூலம் அறிவித்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் நடந்த

## மீட்புபணி மாநாடு பற்றி 'ஆசிய புரோகஸ்'

(மணிலா)

யாழ் மறை மாவட்டத்தில் மீட்பு பணி மகாநாடு நடைபெற்றதாகவும் அதில் தமிழ் மக்கள் படும் துன்பங்கள் தொடர்பாக பல கருத்துக்கள் வெளியிடப் பட்டதாகவும் ''ஆசிய புரோகஸ்'' என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மாநாட்டில் வடக்கு கிழக்கில் இருந்து ஆயர்மார்களும், அவர்களின் பிரதிநிதிகள் மற்றும் குருக்கள், கன்னியாஸ்திரிகள் கலந்து கொண்டதாகவும் இம் மாநாட்டில் நடைபெற்ற திருப்பலிப் பூசையில் பதின்நான்கு றோசாப் பூக்கள் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்டதாகவும் இதில் இப் பூக்கள் முட்கம்பிகளுக்கு மத்தியில் இருப்பதை போன்று வைத்து திருப்பலி பூசை ஒப்பு கொடுக்கப்பட்டது எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இராணுவ கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பதினான்கு பங்குகளைச் சித்திரிக்கிறது எனவும் அம் மக்கள் படும் துன்பங்களை சித்திரிக்கும் விதத்தில் முட்கம்பி மத்தியில் றோசா பூக்கள் வைக்கப்பட்டதாகவும் அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## தொலைபேசி இருந்தும் தொடர்பு ஏதுமில்லை

### ஜனாதிபதி விஜேதுங்கா விசனம்

(கொழும்பு)

சிரேஷ்ட உயர் அதிகாரிகளுக்கு அலுவலக உபயோகத்திற்காக வீட்டுக்கும், திணைக்களத்துக்கும் தொலைபேசி இணைப்பு வழங்கியும் அவர்களுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை என்று ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா உயர் அதிகாரிகளை எச்சரித்துள்ளார்.

அதிகாரிகளைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டால், அவர்களிடமிருந்து பதில் கிடைப்பதில்லை என்று ஜனாதிபதி அமைச்சர்களுக்குச் சுட்டிக் காட்டியுள்ளார் இது அதிகாரிகள் மீது மிகத் தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதோடு அரசின் மீதும் தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிகாரிகளின் கவனக்குறைவு குறித்து தனது செயலாளர் கே எச். ஜே விஜேதாஸா அமைச்சுகளின் செயலாளர்களுக்கு அனுப்பிய சுற்றுநிருபத்தைக் கவனத்தில் எடுக்கும்படி அமைச்சர்களைக் கேட்டிருப்பதுடன், அமைச்சுகளில் சுற்றுநிருபத்தை அமுல்படுத்தும்படியும் பணித்துள்ளார்

பொதுமக்கள் அமைச்சர்களைச் சந்திக்க வசதியாக அவர்களும் செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார் அமைச்சர்கள் வீடுகளில் இல்லாத சமயம் பொதுமக்களின் குறைகுற்றங்களை அறிய பொறுப்புள்ள ஒருவரை நியமிக்கும்படியும் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## சுயதொழில் கடன்பெற விண்ணப்பம் கோரல்

இன்றைய சூழ்நிலைகளினால் வருமானங்களை இழந்துள்ள அல்லது வருமானங்கள் போதா நிலையிலுள்ள குடும்பங்களிலிருந்து சுயதொழில் வாய்ப்புக் கடன்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் ஆரம்பிக்கப்பட்ட சுயதொழில் வாய்ப்புக்கடன் திட்டத்தின் கீழ் ஏற்கனவே வழங்கப்பட்ட நெற்செய்கைக் கடன் கோழி வளர்ப்புக் கடன், உருளைக்கிழங்குக் கடன் ஆகிய திட்டங்களில் மீள் அறவீடுகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறு மீளப்பெறப்பட்ட கடன்களை புதிய பயனாளிகளுக்குக் கொடுக்கவே இவ் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதுவரை வலிகாமம் கோட்டத்தில் 75 பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தேயிலை விற்பனையின் போது



# தம்பு சிவசம்பு

மீசாலை வளைகுடாப் பகுதியைச் சேர்ந்த காலஞ்சென்ற பெரியதம்பி கந்தவனம் தம்புவினதும், நாகர் சடையர் சின்னாட்சியினதும் அன்பு மகன், சிவசம்பு அவர்கள் தனது 73 வது பிறந்த தினத்தை இன்று நினைவு கூருகிறார்.

கண்டி வீதி,
மீசாலை தெற்கு (சி-9429)

# 1-வதுபிறந்தநாள்வாழ்த்து



## செல்வி குகதாஸ் சரணிகா

வீ. எம். ரீ. பளையைச் சேர்ந்த குகதாஸ் யோகேஸ்வரி தம்பதிகளின் செல்வப்புதல்வி சரணிகா தனது முதலாவது பிறந்த நாளை 17-05-94 இல் பளையில் தனது இல்லத்தில் வெகுவிமரிசையாக கொண்டாடுகின்றார். இவரை அப்பா (இத்தாலி), அம்மா, மோகன் சித்தப்பா (லண்டன்) குமார்மமா (சுவிஸ்), சசிஅத்தை (சுவிஸ்), வனஜன் மச்சான் (சுவிஸ்), லிங்கம் மாமா (இத்தாலி), இவர்களுடன் பளையில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, அழகுமாமா குடும்பத்தினர், குணம் மாமா குடும்பத்தினர், நவம் மாமா குடும்பத்தினர், வனஜா அத்தை மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் அன்னைக்கும், தந்தைக்கும் அவனிதனில் புகழ் சேர்த்து ஆயகலைகள் அனைத்தும் கற்று பார்போற்ற சீர் பெற்று நீ பல்லாண்டு வாழ்க வென இந்நாளில் வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
மு. இ. செல்லத்துரை
வீ. எம். ரீ, பளை.

(8219)

# 75 தமிழ்க் குடும்பங்கள் படையினரால் விரட்டியடிப்பு

(மட்டக்களப்பு)

உன்னிச்சைப் பகுதியில் அகதிகளாக மீளக்குடியேற்றிய 75 குடும்பங்கள் அப்பகுதி சிறிலங்கா இராணுவத்தினரால் உடனடியாகவே வெளியேற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

கடந்த சனியன்று உன்னிச்சை 8ஆம் கட்டைக் கிராமத்தில் அகதிகளாக இருந்து மீளக்குடியேற்றப்பட்ட 75க்கு மேற்பட்ட குடும்பங்களையே உன்னிச்சை இராணுவத்தினர் உடனடியாக வெளியேறுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளனர்

இராணுவத்தினரின் உத்தரவையடுத்து அம்மக்கள் அங்கிருந்து வெளியேறி வேறு இடங்களுக்குச் சென்றுகொண்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன

# கொலைமுயற்சி தொடர்பாக அடையாள அணிவகுப்பு

(கொழும்பு)

தென்மாகாணசபை அவைத் தலைவரான அபேவர்த்தனாவின் வாகனத்தின் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி படுகொலை செய்ய முயன்றதாகக் கூறப்படும் இரு பொலிசாரையும் அடையாளம்காணுவதற்கான அடையாள அணிவகுப்பு ஒன்று தெய்யந்தறை நீதிமன்றத்தில் நடைபெற்றது.

தென்மாகாணசபை தேர்தலுக்கான பிரசாரங்கள் நடந்த காலப் பகுதியில் மார்ச் 11ஆம் திகதி இரவு அபேவர்த்தன வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் இவரது வ கனம் மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இதையடுத்து பொலிசார் மேற்கொண்ட தேடுதலையடுத்து ரி-56 துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டது. இச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாக கருதப் டும் இரு பொலிசாரை அடையாளம் காணவே இந்த அடையாள அணிவகுப்பு நடாத்தப்பட்டது. எனினும் எவரும் அடையாளம் காணப்படவில்லை

# இளைஞரை கைது செய்து கொடூர சித்திரவதை

(மண்டூர்)

மண்டூர்ப் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா விசேட அதிரடிப் படையினர் இளைஞர் ஒருவரைக் கைது செய்து கொடூரமான முறையில் சித்திரவதை செய்தபின் முகாமில் தடுத்து வைத்துள்ளதாக கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன

கடந்த மூன்றாம் திகதி மண்டூர் முகாமிலிருந்து வெளியேறிய விசேட அதிரடிப் படையினர் மண்டூர்ப் பகுதியில் தையல் வேலை செய்யும் 35ம் கிராமத்தைச் சேர்ந்த கிருபராஜா உதயகுமார் (வயது 19) என்ற இளைஞரையே கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றனர் அங்கு வைத்து மிகக் கொடூரமான முறையில் சித்திரவதைக்கு உட்படுத்தியபின் அம் முகாமிலேயே தொடர்ந்தும் தடுத்து வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

# அரசுக்கு எதிராக போராட காலம் வந்துவிட்டது

### சு. கட்சி எம். பி மகிந்த ராஜபக்ஸ

(கொழும்பு)

இன்று ஐ. தே. க தமது கட்சிக்குள்ளேயே ஒருவரை ஒருவர் கழுத்தறுப்பு செய்கின்றனர். அக்கட்சியில் உள்ள மேலும் பலர் மூழ்கப் போகும் கப்பலில் உள்ள எலிகளைப் போல் பதுங்க இடமின்றி குழப்பமடைந்து அங்குமிங்கும் ஓடித்திரிகின்றனர்.

இவ்வாறு அம்பாந்தோட்டை மாவட்ட சுதந்திரக்கட்சி எம். பி. மகிந்த ராஜபக்ஸ கூறினார். பொதுக்கூட்டம் ஒன்றில் தொடர்ந்து பேசிய அவர் மக்களை ஏமாற்றி அவர்களின் உரிமைகளைப் பறித்தெடுத்து கடந்த 17 வருடங்களாக ஆட்சிசெய்யும் அரசுக்கு எதிராக மக்கள் ஒன்றிணைந்து போராடும் காலம் வந்துவிட்டது இன்று பொலநறுவையில் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அதே நிலை பரவும்நிலை வெகுதூரத்தில் இல்லை என்றார்.

இடங்களிலும், 31ஆம் திகதி மாலை 3 மணிக்கு சண்டிலிப்பாய் சனசமூக நிலையத்திலும், சாவகச்சேரிப் பிரிவில் காலை 9-30 மணிக்கு மீசாலை ஐ. நா. சங்க சன சமூக நிலையத்திலும் இப் பயிற்சி வகுப்பை நடாத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாதாந்தம் தொடர்ச்சியாக நடைபெறவிருக்கும் இப்பயிற்சி வகுப்புக்களில் சகல விவசாயிகளையும் உற்பத்திக் குழுக்களையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செய்திக் குறிப்பொன்றின் மூலம் அறிவித்துள்ளது.

# சுயதொழில் கடன்பெற விண்ணப்பம் கோரல்

இன்றைய சூழ்நிலைகளினால் வருமானங்களை இழந்துள்ள அல்லது வருமானங்கள் போதா நிலையிலுள்ள குடும்பங்களிடமிருந்து சுயதொழில் வாய்ப்புக் கடன்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் ஆரம்பிக்கப்பட்ட சுயதொழில் வாய்ப்புக்கடன் திட்டத்தின் கீழ் ஏற்கனவே வழங்கப்பட்ட நெற்செய்கைக் கடன் கோழி வளர்ப்புக் கடன், உருளைக்கிழங்குக் கடன் ஆகிய திட்டங்களில் மீள் அறவீடுகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறு மீளப்பெறப்பட்ட கடன்களை புதிய பயனாளிகளுக்குக் கொடுக்கவே இவ் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதுவரைவலிகாமம் கோட்டத்தில் 75 பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தேயிலை விற்பனையின் போது சராசரி கிலோவுக்கு 4 ரூபா நட்டம்

### தனியார் தேயிலை தோட்ட உரிமையாளர்

(கொழும்பு)

தேயிலை ஏலத்தை தனியார் நடத்துவதன் மூலம் தேயிலை உற்பத்தியாளர்கள் பெரும் நட்டத்திற்குள்ளாகின்றனர். தேயிலை ஏலம் நடத்தும் பொறுப்பை அரசு கையேற்க வேண்டும் உற்பத்தியாளருக்கு மானிய உதவி வழங்கப்படவேண்டும் என தனியார் தேயிலை தோட்ட உரிமையாளர் அமைப்பின் தலைவி திருமதி நிர்மலா வெள்ளைச்சாமி தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் மாநாடு ஒன்றில் பேசிய அவர் ஏல நடவடிக்கைகளை 10 தேயிலை ஏற்றுமதியாளர்களே கைக்குள் வைத்துள்ளனர். அதனால் அவர்கள் தீர்மானிப்பதே விலையாக உள்ளது அதனால் உற்பத்தி செலவு விற்கும் விலையைவிட அதிகமாகவுள்ளது. இதே போக்கு தொடருமானால் தேயிலை உற்பத்தி தொழிலை விட்டு நாம் விலகவேண்டிய கட்டாயம் ஏற்படும்

எமக்கு சராசரியாக ஒரு கிலோ தேயிலைக்கு 4 ரூபா நஷ்டமேற்படுகிறது. அரசு 2 மாத தேயிலை உற்பத்தி கடன் தருவதாக கூறினாலும் ஒரு மாத கடனையே தந்தது 1989 இல் மின்பாவனை யுனிட் ஒன்றுக்கு 1.60 சதம் அறவிடப்பட்டது. தற்போது 3.80 சதம் அறவிடப்படுகிறது. தேயிலை ஏற்றுமதியாளர்களால் சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் கொள்ளையடிக்கப் படுகின்றனர். ஏலத்திற்கான சட்டதிட்டங்கள் பழமையானவை இன்றைய நிலைக்கு ஒத்துவராதவை- இச்சட்டங்கள் மாற்றப்படவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மட்டு. வாவியில் மூழ்கி பொலிசார் மரணம்

(மட்டக்களப்பு)

களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் கான்ஸ்டபிளான எச். டபிள்யூ. சுனில்சாந்த (26) மட்டக்களப்பு வாவியில் மூழ்கி மரணமானார். நாமல் ஓயா எனும் இடத்தைச்சேர்ந்த இவர் களுவாஞ்சிக்குடியில் உள்ள பட்டிருப்பு பாலத்தில் உள்ள காவல் நிலையத்தில் சம்பவதினம் இரவு கடமையாற்றினார்.

மறுநாட் காலை முகம் கழுவ மட்டக்களப்புவாவிக்கு சென்ற போது நீரில் மூழ்கி மரணமானார் என்று களுவாஞ்சிக்குடி பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

# பரிசளிப்பு விழா

அராலி இந்துக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா எதிர்வரும் 19ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் கல்லூரி அரங்கில் கல்லூரி அதிபர் திரு. எஸ். செல்வராசா அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

# எழுதுவினைஞர் பரீட்சை ஆகஸ்ட் 25இல் நடைபெறும்

(கொழும்பு)

எழுதுவினைஞர் மற்றும் அதனுடன் தொடர்புடைய அதிகாரிகளை அரச சேவையில் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 25ஆம் திகதி நடைபெறும். இதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 20ஆம் திகதியிலிருந்து ஜூன் 15ஆம் திகதி வரை பரீட்சை திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளை சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப்பரீட்சை ஜூன் மாதம் 4ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# 500 இலங்கையரை யேமனிலிருந்து அழைக்க முயற்சி

(கொழும்பு)

உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் யேமன் நாட்டில் 500 இலங்கையர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இவர்களை இலங்கைக்கு திருப்பி அழைப்பது தொடர்பாக வெளிவிவகார அமைச்சு ஏனைய அரசாங்கங்களின் ஒத்துழைப்பை நாடியுள்ளது.

அங்குதங்க முடியாதோரை இங்கு வரவழைக்க முயற்சிகள் நடைபெற்று வருவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

## 90-ம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



அமரர்

**கணபதிப்பிள்ளை விஜயரட்ணம்**

(காந்தி)

தோற்றம் ; 14 - 09 - 1947

மறைவு : 17 - 02 - 1994

பாசத்தின் பிறப்பிடமாய் பண்பிலே சிகரமாய்
பார்போற்ற எங்களை வழவைத்து
பாதியிலே பிரிந்து விட்ட — எங்கள்
அன்புத் தெய்வத்திற்கு எமது
இதய காணிக்கை

ஜேர்மனியில் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், எமது துன்பத்தில் பங்குபற்றிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

துமபனை வீதி, மனைவி, மகள்
பருத்தித்துறை. (8265)

## அந்தியேட்டி அழைப்பும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும்



தோற்றம் : 14. 08. 1935

மறைவு: 18. 04. 1994

**திருமதி மீனாவதி பழனிவேல்**

(வல்வெட்டித்துறை)

அன்புத் தெய்வமே குடும்பத்தின் மூத்த சுடரே நீங்கள் அணைந்து மாதம் ஒன்று ஆனதோ எங்கள் பாச தீபமே, ஒரு யுகம் ஆனாலும் உங்கள் நினைவுகள்

# கொலை களங்கத்தை நீக்க நடவடிக்கை எடுங்கள்

### ஜனாதிபதியிடம் மூன்று அமைச்சர்கள்

(கொழும்பு)

அண்மையில் படுகொலை செய்யப்பட்ட மாத்தளை மாநகரசபை உறுப்பினர் முகமட் ஹுசைனின் படுகொலைக்குக் காரணமான உண்மையான கொலையாளியாரென்பதை இனம் கண்டு மக்களுக்கு அறிவிக்க நடவடிக்கைகளை எடுக்குமாறு மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று அமைச்சர்கள் ஜனாதிபதி விஜேதுங்காவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்

துறைமுக கப்பல் போக்குவரத்து அமைச்சர் அலிக் அலுவிகார, விவசாய திட்ட அமைச்சர் ஜே. பி ஜயரட்ண பண்டா, சமூக கல சார ஒருங்கிணைப்பு திட்ட அமைச்சர் டி. பி. ஏகவிரட்ண ஆகிய மூவருமே இவ்வாறு கேட்டுள்ளனர். கடந்த மாதம் 15ஆம் திகதி இரவு இனந்தெரியாத துப்பாக்கி நபர்களினால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட மாத்தளை மாநகரசபை ஐ. தே. க. உறுப்பினர் ஹுசைனின் படுகொலையில் இந்த மூன்று அமைச்சர்களின் நெருங்கிய உறவினர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாக வதந்திகள் பரவுவதாலேயே இம்மூவரும் இந்த வேண்டுகோளை விடுத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது;

# சர்வதேச தலையீடு எதுவும் இங்கு தேவையற்றது

### வெளிநாடுகளுக்கான அரசியல் கொள்கை பணிப்பாளர்

எமது நாட்டில் இன்று வடக்கு கிழக்கில் உள்ள பிரச்சினையை நாம் உள்நாட்டிலேயே வைத்து தீர்த்துக் கொள்ள முடியும் என உறுதியாக நம்புகின்றோம். எனவே சர்வதேச தலையீடு அல்லது நடுநிலைமை தேவையற்றதாக கருதுகின்றோம் என வெளிவிவகார அமைச்சின் வெளிநாடுகளுக்கான அரசியல் கொள்கை பணிப்பாளர் ஜெனரல் ஜயந்த தனபால தெரிவித்துள்ளார்.

பி. பி. சி சிங்கள சேவையான சந்தேசியவிற்கு அளித்த பேட்டியிலே இவ்வாறு கருத்தை தெரிவித்துள்ளார். உள்நாட்டு பிரச்சினைக்கு சர்வதேச தலையீடு தேவையற்றது என சிறிலங்கா கூறும் அதேபோது மொஸம்பிக் நாட்டுக்கு ஐக்கிய நாடுகள் அமைதிப் படையில் பணியற்ற சிறிலங்கா பொலிஸார் சிலரை அனுப்புவது சிறிலங்காவின் கொள்கைக்கு முரணானது என செய்தியாளர் சுட்டிக் காட்டியபோது. மொஸாம்பிக் அரசாங்கம் விருப்பத்தின் பெயரிலேயே ஐ. நா. அமைதிப் படையை அழைத்தது. அதன் பெயரில் நாம் அனுப்பினோம். அவ் அரசாங்கம் விரும்பாத ஒன்றை நாம் செய்யவில்லை என தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் ஏற்பட்டுள்ள பிரச்சினை மிக விரைவில் தீர்க்கப்படும் என்றும் அது எமது உள்நாட்டு பிரச்சினை என்றும் அதனை நாமே தீர்த்து கொள்ள முடியும் என தாம் கருதுவதாக தெரிவித்தார்.

# சஜித் பிரேமதாசா தேர்தலில் போட்டியிடமாட்டார்

### ஹேமா பிரேமதாசா தெரிவிப்பு

அலக் ரொபட்சன், ஆமிட், காலிங்க ஒபயவன்ச ஆகிய மூன்று எம்பிகளும் தமது பதவியை துறப்பதற்கு விதித்த நிபந்தனை தொடர்பாக என்னால் எதுவும் கூற முடியாது. அரசே அது பற்றி முடிவு எடுக்க வேண்டும் என திருமதி ஹேமா பிரேமதாசா தெரிவித்தார்

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜயசேகர தம்மை வந்து சந்தித்தது குறித்து கருத்து தெரிவித்த ஹேமா பிரேமதாசா பல தரப்பட்ட விடயங்கள் குறித்து நாம் பேசினோம் ஆனால் அவற்றை வெளியிட நான் விரும்பவில்லை. சந்திப்பு சிநேகபூர்வமாக இருந்தது என்றார்

மகன் சஜித் பிரேமதாசா குறித்து கேட்கப்பட்டபோது அவர் இப்போது பொதுத் தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை. தேசியப்பட்டியல் மூலமே அவர் எம்பியாக விரும்புகிறார். அவரின் வயதுக்கு அதுவே சிறந்தது எனவும் ஹேமாபிரேமதாசாகூறினார்

# பெரும்பான்மையினரிடம் இனவாதம் இருக்கும்வரை இனப்பிரச்சினைதீராது

### அமைச்சர் தயாரட்ணா தெரிவிப்பு

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



மாதா மடியில் 27.9.1971

மண்ணின் மடியில் 17.5.1989

**வீரவேங்கை இன்சூர்**

(நடராசா ஜெயகரன்)

இன்சூர் என்றவுடன் இன்முகத்தைக் காட்டிடுவாய்
இன்னல்கள் பல வந்தபோதும் இன்முகத்தைக் காட்டிடுவாய்
துன்பங்கள் பல வந்தும் உன் குடும்பத்தை
தூரத்திடவும் துணிந்து நின்றாய்
இன்னுயிரை துச்சமென்று இணைத்து நின்றாய்
விடுதலை புலியாய்
காட்டில் நீ இறந்ததனால் தமிழ் ஈழநாள்
ஏட்டில் பதித்து விட்டாய் உன் பெயரை எம் நெஞ்சில்
பாட்டாய் பதிந்து விட்டாய் படித்திடுவோம் உன்புகழை

இன்சூர் வீதி, — குடும்பத்தினர்
கோண்டாவில் வடக்கு. (8299)

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 08-05-1967

வீரச்சாவு 17-05-1986

**வீரவேங்கை அலெக்ஸ்/அரி**

(நாகலிங்கம் அரிகரன்)

(புங்குடுதீவு-11)

எட்டதில் பிறந்து
எட்டிலே மறைந்து - ஆண்டும்
எட்டாகி விட்டதையா - எதிரி



தோற்றம்:

14. 08. 1935

மறைவு:

18. 04. 1994

## திருமதி மீனாவதி பழனிவேல்

(வல்வெட்டித்துறை)

அன்புத் தெய்வமே குடும்பத்தின் மூத்த சுடரே நீங்கள் அணைந்து மாதம் ஒன்று ஆனதோ எங்கள் பாச தீபமே, ஒரு யுகம் ஆனாலும் உங்கள் நினைவுகள் என்றும் நிலைத்திருக்கும். திருகோணமலையில் எம்மை விட்டுப் பிரிந்த எமது தாயாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 18-05-94 நாளை காலை வல்வெட்டித்துறையில் உள்ள எமது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

குச்சம் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

**பிள்ளைகள்.**
(8284)

## 2-ம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
03-04-1972

உதிர்வு
07-06-1992

## செல்வி மதிவதனா தம்பு

சண்டிலிப்பாய்

வந்ததோ மரணமுன் மீஞ்சுடலும் சாய்ந்ததோ
நொந்ததோ நினதுடல் நோயினல் வாடுகையில்
என்ன நினைத்தனையோ ஈற்றில் இவ்வையவாழ்வு
சின்ன வயதில் கசந்ததோ? என்ன சொல்லி நாமழ,
ஈராண்டு சென்றதம்மா, மறவோம், நாமிருக்கும்
வரை.

சுராச்லேன்,
சண்டிலிப்பாய் (8295)

உங்கள் பிரிவால் வாடும்
உறவினர்கள்.

# போட்டியிடமாட்டார்

### ஹேமா பிரேமதாசா தெரிவிப்பு

அலக் ரொபட்சன், ஆமிட், காலிங்க ஒபயவன்ச ஆகிய மூன்று எம்பிகளும் தமது பதவியை துறப்பதற்கு விதித்த நிபந்தனை தொடர்பாக என்னால் எதுவும் கூறமுடியாது. அரசே அது பற்றி முடிவு எடுக்க வேண்டும் என திருமதி ஹேமா பிரேமதாசா தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜயசேகர தம்மை வந்து சந்தித்தது குறித்து கருத்து தெரிவித்த ஹேமா பிரேமதாசா பல தரப்பட்ட விடயங்கள் குறித்து நாம் பேசினோம் ஆனால் அவற்றை வெளியிட நான் விரும்பவில்லை. சந்திப்பு சிநேகபூர்வமாக இருந்ததுஎன்றார்.

மகன் சஜித் பிரேமதாசா குறித்து கேட்கப்பட்டபோது அவர் இப்போது பொதுத் தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை. தேசியப்பட்டியல் மூலமே அவர் எம்பியாக விரும்புகிறார். அவரின் வயதுக்கு அதுவே சிறந்தது எனவும் ஹேமாபிரேமதாசாகூறினார்

# பெரும்பான்மையினரிடம் இனவாதம் இருக்கும்வரை இனப்பிரச்சினைதீராது

### அமைச்சர் தயாரட்ணா தெரிவிப்பு

(கொழும்பு)

உணவு முத்திரை பெறுபவர்களிற்கு நூறு கோடி ரூபாவை செலவிடும் அரசு வடக்கு கிழக்கு யுத்தத்திற்கு மட்டும் 2000 கோடி ரூபாவைச் செலவிடுகிறது எந்தவொரு அரசும் இவ்வளவு பெரிய தொகையை யுத்தத்திற்காக செலவிட விரும்புவதில்லை. எனினும் பெரும்பான்மை இனத்தவரிடம் இருக்கும் இனவாதம் மாறாதவரை இந்நாட்டின் இனப்பிரச்சினை தீரப்போவது இல்லை இவ்வாறு புனர்வாழ்வு, புனர்நிர்மாண சமூக சேவைகள் அமைச்சர் பி. தயரட்ணா தெரிவித்தார்

இரத்தினபுரி நகர மணிக்கூட்டுக் கோபுரத்தருகே நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வடக்கு கிழக்கு யுத்தத்தால் பெரும்பாலும் கிழக்கு மாகாண மக்களே அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர் யுத்தத்தின் கோரத் தன்மையை கிழக்கு மாகாண மக்களை விட வேறு எவருமே அறிந்திருக்க முடியாது யுத்தத்தால் அந்த மாகாண மக்கள் அனுபவித்துவரும் வேதனையை - துயரத்தை தென் மாகாண மக்கள் அறிந்திருக்க முடியாது. தென் மாகாண மக்களுக்கோ அல்லது உங்களுக்கோ அது தொடர்பான கரிசனையோ அக்கறையோ கிடையாது எனவும் தெரிவித்தார்

# தேயிலை விலையில் வீழ்ச்சி அமைச்சர் அவசர மாநாடு

(கொழும்பு)

இலங்கைத் தேயிலையின் விலை தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருவது தொடர்பக ஆராய பெருந்தோட்டத்துறை ராஜாங்க அமைச்சர் மனோ விஜேரட்ண கொழும்பில் தேயிலை உற்பத்தியாளர்கள், தேயிலை வர்த்தகர்கள், தரகர்கள் முதலனோரை அழைத்து மாநாடு ஒன்றை நடத்தியுள்ளார் திறைசேரி அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர்.

தேயிலையின் விலை தொடர்ந்து வீழ்ச்சியடைகிறது. ஆனால் உற்பத்திச்செலவு அதிகரிக்கின்றது. இந்நிலையில் நாம் என்ன செய்வது என தேயிலை உற்பத்தியாளர்கள் மாநாட்டில் முறையிட்டனர் கடந்தவருடம்இதே ஏப்ரல்,மே மாத காலப்பகுதியில் ஒரு கிலோ தேயிலை ரூபா 71 63 சதத்திற்கு விற்பனையானது. இவ்வருடம் இதேகாலப் பகுதியில் 10ரூபாவால் விலை குறைந்துள்ளது இதனால் நாம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றோம்.

உற்பத்தியாகும் தேயிலையின் தரம் குறைந்தபடியினாலேயே இலங்கை தேயிலைக்குள்ள கிராக்கி குறைந்துள்ளதாக வர்த்தகர்கள் சுட்டிக் காட்டினர்.

# இஸ்ரேல் - பி. எல். ஓ. ஒப்பந்தம் சிறிலங்கா வரவேற்பு

(கொழும்பு)

ஜெரிக்கோ பிரதேசம் மற்றும் காஸா திட்டில் பாலஸ்தீனிய சுயாட்சியை ஏற்படுத்தும் வகையில் கெய்ரோவில் மே 4ஆம் திகதி கைச்சாத்தான ஒப்பந்தத்தை சிறிலங்காஅரசு வரவேற்றுள்ளது. அப்பகுதியில் வாழும் பாலஸ்தீனிய மக்களுக்கு ஒரளவு சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சின் செய்தி அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது

மே 4ஆம் திகதி கைச்சாத்தானசமாதானத்துக்கானஇத் தீர்வு அனைத்துலகச் சமாதானத்திலும், பாதுகாப்பிலும் நம்பிக்கை உடையவர்களுக்கு ஏற்புடையதாகும் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா சிறிலங்கா மக்கள் சார்பிலும், அரசுசார்பிலும் தனது வாழ்த்துச்செய்திகளை தென்னாபிரிக்கக் குடியரசின் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவுக்கு அனுப்பியுள்ளார்.



பிறப்பு
08-05-1967

வீரச்சாவு
17-05-1986

## வீரவேங்கை அலெக்ஸ்/அரி

(நாகலிங்கம் அரிகரன்)

(புங்குடுதீவு-11)

எட்டதில் பிறந்து
எட்டிலே மறைந்து - ஆண்டும்
எட்டாகி விட்டதையா - எதிரி
கொட்டம் அடக்கியே
சிட்டாய் பறந்திட்ட - உன்கதை
ஈழமண் சொல்லுதையா

என்றும் நீங்கா நினைவுடன்
அப்பா, அம்மா, தங்கை,
உறவினர், நண்பர்கள்.

பொற்பதி வீதி,
கொக்குவில். (8288)

## 31-வது நாள் நினைவஞ்சலி



தோற்றம்
24-03-1928

மறைவு
18-04-1994

## தாமோதரம்பிள்ளை பூபதியம்மா

அன்பின் திருவுருவாய்! பண்பின் உறைவிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய் கடமையின் இருப்பிடமாய் திராவினைகளைப் போக்கும் அம்மாவாய் மாதா குலத்துக்கு எடுத்துக்காட்டாய் இருந்து திடீரென எம்மை ஆறாத்துயரில் மூழ்க வைத்து மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்பு அம்மாவே உங்கள் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து நிற்கும்

நாகவாசா,
பொலிகண்டி.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள், அடியார்கள்.

(8300)

Nallur branch library

**சிந்தனைக்கு**

ஆகாயத்தில் கோட்டை கட்ட கட்டடக்கலையின் விதிமுறை ஏதும் கிடையாது.

ஜி கே செஸ்ட்டர்ட்டன்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 17-05-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05


## கனவிலும் மறவாதது

அப்பட்டமாகவே தெரியும் அளவிற்கு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தேர்தல் சலுகைகளை அறிவித்து வருகின்றார். வரிக்குறைப்பென்றும், சலுகைகள் என்றும், சம்பள உயர்வென்றும், வேலைவாய்ப்பென்றும் டி. பி. விஜேதுங்கா வெளியிடும் அறிவிப்புக்கள், கடந்த காலத்தில் சிறிலங்கா ஆட்சித் தலைவர்கள் எவரும் செய்யாத அளவிற்கு உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.

டி. பி. விஜேதுங்காவின் இவ் அறிவிப்புக்கள் அரசிற்குப் பெரும் பொருளாதார சுமையை ஏற்படுத்தியுள்ளதாகப் பொருளியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால், இதனைப் பொருளியல் ஆய்வாளர்கள்தான் தெரிவிக்க வேண்டும் என்பதல்ல. சாதாரணமாக வெளிப்படையாக அவதானிப்பவர்கள் கூடப் புரிந்து கொள்ள கூடிய அளவிற்கு செலவீட்டின் தொகை உள்ளது.

சிறிலங்கா இராணுவத்தின் செலவீடு குறித்து தற்பொழுது சரியான புள்ளி விபரங்களை அரசாங்கம் வெளியிடுவதில்லை, வரவுசெலவுத்திட்டத்தில்அறிவிக்கப்படும் தொகையைவிட பல நூறு கோடி ரூபாக்கள் அதிகமாகவே இராணுவத்திற்குச் செலவிடப்படுகின்றது என்பதை அரசாங்கமும் மறுப்பதில்லை,

இவ்வாண்டிற்கான இராணுவச் செலவீடாக 1830 கோடி ரூபா வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருப்பினும், அரசாங்கத் தரப்பினரே பேசும் போது சில சமயம் 2000 கோடி ரூபா எனவும், சிலவேளை 2500 கோடி ரூபா எனவும் பேசிவருகின்றனர். இதே சமயம் பூநகரித் தோல்வியின் பின்னர் 1000 கோடி ரூபா மேலதிகமாக இராணுவத்திற்கு ஒதுக்குமாறு டி பி. விஜேதுங்கா பணித்திருந்தார்.

இவ்வாறாக, திறைசேரி இராணுவச் செலவீட்டால் சிக்கித்திணறிக் கொண்டிருக்கையிலேயே, டி. பி. விஜேதுங்கா தற்பொழுது தேர்தல் சலுகை அறிவிப்புக்களை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார். அவர் மேதினச் செய்தியில் அறிவித்த சலுகை அறிவிப்புக்கள் அரசாங்கத்திற்கு 1800 கோடி ரூபா மேலதிக தேவையை ஏற்படுத்தியுள்ளதாக அரச வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது.

இவைதவிர வருமான வரியின் உச்சவரம்பை உயர்த்தியமையால், சுமார் ஒரு லட்சம் பேர் வரிவிலக்கு பெறவுள்ளனர்- இதன் மூலம் வருடத்திற்கு 80 கோடி

# ஈழ அகதிகளை வற்புறுத்தி திருப்பி அனுப்பக் கூடாது

### தி. மு. க செயற்குழு தீர்மானம்

(சென்னை)

சிறிலங்கா இராணுவத்தினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்து மத்திய மாநில அரசு அலுவலகங்கள் முன் கடந்த 12-ம் திகதி தி. மு. க சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதற்கு முன்பாக தி. மு க செயற்குழு கூட்டம் அண்ணா அறிவாலயத்தில் நடந்தது கூட்டத்திற்கு தி. மு. க. தலைவர் கருணாநிதி தலைமைதாங்கினார். கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்களாவன; தலைவர் கலைஞரின் தலைமையில் உள்ள தி. மு. கவே உண்மையான தி மு க என்றும் இரு வண்ண கொடியும் உதயசூரியன் சின்னமும் கழகத்திற்கே சொந்தம் என்றும் வாய்மையே வெல்லும் என்றும் நிருபிக்கும் விதத்தில் தேர்தல் ஆணையக தீர்ப்பு அளவிலா மகிழ்ச்சிதருகிறது.

ஜெயலலிதா தலைமையிலான ஆட்சியில் சட்டம், ஒழுங்கு மாநிலததில் சீர்குலைந்துள்ளது இதற்கான காரணத்தை அ தி. மு. க அரசே பொறுப்பேற்கவேண்டும்: தமிழ் நாடு, புதுவை மாநில மீனவர்களை தாக்குவது, சட்டுக் கொல்வது என்பது சிங்கள இராணுவத்தினரின் தொடர் நிகழ்வுளாகி விட்டதை இச்செயற்குழு ஆழ்ந்த வருத்தத்துடன் சுட்டிக்காட்டுகிறது இந்தக் கொடுமைக்கு ஆதரவாக இருக்கும் சிறிலங்கா அரசுக்குக் கண்டனத்தைத்தெரிவித்துக் கொள்ளவும் தமிழக மீனவர் இரத்தத்தால் கடல் நீரை சிவப்பாக்கும் இந்த அநியாயத்தை தட்டிக்கேட்காமல் வேடிக்கை பார்க்கும் மத்திய அரசின் கவனத்தையும், உரிய நடவடிக்கை எடுப்பதில் அக்கறை கொள்ளாமல் உள்ள மாநில அரசின்கவனத்தையும்ஈர்க்கும் வகையில் ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்யப்படுகிறது

உரிமைக் குரல் கொடுத்திடும் ஒரே காரணத்திற்காக சிங்கள இராணுவ தாக்குதலுக்கு ஆளாகி உயிருக்கு பயந்தும் பாதுகாப்புத் தேடியும் அகதிகளாக தமிழகத்தில் தஞ்சம் புகுந்திருக்கும் ஈழத்தமிழர்களை மனிதாபிமானத்தோடும் மனித உரிமைகளை பாதுகாக்கும் விதத்திலும் கலைஞர் ஆட்சி நடத்தியதற்கு மாறாக தவறு செய்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக இங்கு வாழும் எல்லா இலங்கை தமிழ் அகதிகளும் வன்முறையில் ஈடுபடும் சமூக விரோதிகள் போல சித்தரித்து அவர்களை ஈழத்தில் அமைதி ஏற்பட முன்பாக திருப்பி அனுப்பவேண்டும் என சட்டசபையில் ஜெயலலிதா பேசியுள்ளதை இச்செயற்குழு வன்மையாக கண்டிப்பதுடன் கட்டாயப்படுத்தி இலங்கைத் தமிழ் அகதிகளை வற்புறுத்தி அனுப்பக்கூடாது என இச்செயற்குழு வற்புறுத்துகிறது என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

## விடுதலைப் புலிகள் விடயம் அரசியலாக்காதீர்கள்

### அமைச்சர் ராஜேஷ் பைலட்

(சென்னை)

விடுதலைப் புலிகள் விடயத்தை அரசியலாக்கவேண்டாமென நான் தமிழக அரசுக்கு ஆலோசனை தெரிவிக்கின்றேனென மத்திய உள்துறை இணையமைச்சர் திரு. ராஜேஷ்பைலட் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்படி கருத்தைத் தெரிவித்துள்ளார். தொடர்ந்து அவர் தெரிவிக்கையில், சட்டத்தைச் சில மாநிலங்கள் தவறாகப் பயன்படுத்துவதாகவும், இச்சட்டத்தின்கீழ் எத்தனை பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இச்சட்டம் எப்படி அமுலாக்கப்படுகிறது என்பது பற்றிய விபரங்களை மாநில அரசுகளிடம் மத்திய அரசு கேட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

தென்னிந்தியக் கரையோரப் பாதுகாப்புமீண்டும்பலப்படுத்த படும் என்றும் இதுபற்றிப் பாதுகாப்பு அமைச்சுடன் பேசப்படுமென்றும் உறுதியளித்துள்ளார்.

### 2 லட்சம் அகதிகள்

(சென்னை)

தற்சமயம் இந்தியாவில் இரண்டு இலட்சத்து அறுபத்தி ஏழாயிரத்து முந்நூற்று நான்கு அகதிகள் இருப்பதாக உள்துறை அமைச்சர் எஸ். பி சவான் அண்மையில்மக்களவையில் தெரிவித்துள்ளார்

இவ் அகதிகள் இலங்கை டிபோக், பங்களாதேஷ், மற்றும் மியான்மரைச் சேர்ந்தவர்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்;

## போராட்டம், தியாகம் என்பவற்றை சிவப்பு வர்ணம் குறிக்கிறது

### புதிய கட்சி கொடிகுறித்து மறுமலர்ச்சி தி.மு.க

(சென்னை)

வை. கோபாலசாமி தலைமையிலான போட்டி திமுக பொதுக்குழுகூட்டம்சென்னை தி. நகரில் உள்ள நடிகர் சங்கக் கட்டிடத்தில் அண்மையில் நடைபெற்றது

வாழ்வில் உள்ள இருண்ட நிலையை உணர்த்தி நிற்கும் அதற்கு மேலும் கீழும் உள்ள சிவப்பு வர்ணங்கள் அம்மூன்று துறைகளிலும்உள்ள இருண்ட நிலையை போக்கி அரசியலில் நேர்மையையும் பொதுவாழ்

கலைஞரை மக்கள் நிராகரித்துவிட்டனர். அதிமுக மீது மக்கள் வெறுப்புக்கொண்டு விட்டனர் அதிமுக வைத் தோற்கடிக்கக்கூடிய சக்தி எமக்கே உள்ளது''

காங்கிரசிற்கு எதிரான

## ஹெய்ட்டிமீது அமெரிக்கா கடும் பொருளாதார தடை

(வாஷிங்டன்)

ஹெய்ட்டி இராணுவ ஜனாதிபதியை அகற்ற படைபலம் உபயோகிக்கப்படும் சாத்தியத்தை அமெரிக்கா மறுக்கவில்லை. ஆனால் இராணுவ ஆட்சியை அகற்ற ஐ நா. பொருளாதாரத் தடை எவ்வாறு வேலை செய்கிறது என்பதற்கு கால அவகாசம் கொடுக்கவேண்டியுள்ளது என பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஹெய்ட்டியில் இராணுவ ஆட்சியை அகற்றி 1991-ல் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்ட ஜனாதிபதி அரிஸ்டைட்டை பதவியில் அமர்த்தும் கொள்கையின் ஒரு கட்டமாக ஹெய்ட்டியிலிருந்து வரும் அகதிகளுக்கு தஞ்சமளிக்க அமெரிக்கா கட்டுப்பாடுகளை தளர்த்தியுள்ளது. ஐ. நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்திற்கமைய ஹெய்ட்டி மீதான கடும் பொருளாதாரத் தடையை அமெரிக்கா கடைப்பிடிக்கின்றது. இத்தீவு நாட்டை சுற்றி ஆறு அமெரிக்க கப்பல்கள் நிறுத்தப்பட்டுள்ளன. ஹெய்ட்டி விமானப் போக்குவரத்து தடைசெய்யப்பட்டுள்ளது.

## பொலிஸ் துப்பாக்கியினால் சிறுவன் பரிதாபகர மரணம்

### ஜெரிக்கோவில் சம்பவம்

(பெய்ரூட்)

ஜெரிக்கோ பகுதி நிர்வாகத்தை பாலஸ்தீனியப் பொலிசார் அண்மையில் பொறுப்பெற்றுக் கொண்டதை தொடர்ந்து இஸ்ரேல் இராணுவத்தின் வெளியேற்றத்தை மகிழ்ச்சியுடன் வீதிகளில் பாலஸ்தீன மக்கள் கொண்டாடினர்.

இவ் வேளையில் பாலஸ்தீன பொலிசாரின் ஏ. கே - 47 ரக ரைபிள்கள் மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்த குழந்தைகளிடம் விளையாடுவதற்காக கொடுக்கப்பட்டது படப்பிடிப்பாளர்கள் இதையும் படம் பிடித்தனர். இருந்தும் பொலிசாரின் துப்பாக்கியுடன் விளையாடிய சிறுவன் ஒருவன்தனது ஒன்பது வயது நிரம்பிய சகோதரனை தற்செயலாக சுட்டுக் கொன்றான் மற்று மொருவர் காயமடைந்தார். இதனால் அங்குதுக்ககரமான சூழ்நிலை ஒன்று நிலவியது.

## ஐ நா. வாகன அணி மீது றுவாண்டாவில் சூடு

(கிகாலி)

றுவாண்டாவின் தலைநகர் கிகாலியில் கிளர்ச்சியாளர் வசமுள்ள பகுதியூடாகச் சென்ற ஐ நா அமைதிப்படை வாகன அணி ஒன்று தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது இதன்போது வாகன அணியில் மூத்த ஐ நா பிரெஞ்சு அதிகாரிஒருவர் இருந்தபோதிலும் அவர் பாதுகாப்பிற்காக குழி ஒன்றில் பதுங்கிக்கொண்டதை அடுத்து உயிராபத்து ஏதும் ஏற்படவில்லை இச்சம்பவத்தில் வேறு எவரும் காயமடையவில்லை

இச்சம்பவம்குறித்து றுவாண்டாவில் உள்ள ஐ நா படை அதிகாரி ஆட்சேபனை வெளியிட்டுள்ளார் தாக்குதலுக்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை சம்பவம் நடைபெற்ற வீதியூடான அரசபடைகளின் போக்குவரத்து கிளர்ச்சியாளர்களால் துண்டிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது

இதேசமயம் றுவாண்டாவிற்கு மேலும் அதிக தொகையில் ஐ நா படைகளையனுப்ப ஆலோசிக்கப்படினும் அதற்கு கடும் ஆட்சேபனை பல தரப்பிலிருந்து வெளிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

**புலிகளின் குரல்**

**நிகழ்ச்சி நிரல்**

1994 - 05 - 17

செவ்வாய் - இரவு

## பண்ருட்டியின் புதிய கட்சி

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட பண்ருட்டி ராமச்சந்திரன்மக்கள் நலவுரிமை கழகம் என்ற பெயரில் புதிய கட்சியொன்றை ஆரம்பித்துள்ளார்.

சிவப்பு மற்றும் மஞ்சள் நிற

இவ்வாண்டிற்கான இராணுவச் செலவீடாக 1830 கோடி ரூபா வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருப்பினும், அரசாங்கத் தரப்பினரே பேசும் போது சில சமயம் 2000 கோடி ரூபா எனவும், சிலவேளை 2500 கோடி ரூபா எனவும் பேசிவருகின்றனர். இதே சமயம் பூநகரித் தோல்வியின் பின்னர் 1000 கோடி ரூபா மேலதிகமாக இராணுவத்திற்கு ஒதுக்குமாறு டி. பி. விஜேதுங்கா பணித்திருந்தார்.

இவ்வாறாக, திறைசேரி இராணுவச் செலவீட்டால் சிக்கித்திணறிக் கொண்டிருக்கையிலேயே, டி. பி. விஜேதுங்கா தற்பொழுது தேர்தல் சலுகை அறிவிப்புக்களை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார். அவர் மேதினச் செய்தியில் அறிவித்த சலுகை அறிவிப்புக்கள் அரசாங்கத்திற்கு 1800 கோடி ரூபா மேலதிக தேவையை ஏற்படுத்தியுள்ளதாக அரச வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது.

இவைதவிர வருமான வரியின் உச்சவரம்பை உயர்த்தியமையால், சுமார் ஒரு லட்சம் பேர் வரிவிலக்கு பெறவுள்ளனர்- இதன் மூலம் வருடத்திற்கு 80 கோடி ரூபா இழப்பீடு ஏற்படும் என திறைசேரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மேலும், 1993 ஏப்ரலில் இருந்து தற்பொழுது வரிச்சலுகை பெற்றவர்களிடம்பெறப்பட்ட வரியை திருப்பிச் செலுத்துமாறு விதிக்கப்பட்ட பணிப்பினால் மேலும் 75 கோடி ரூபா இழப்பீடு ஏற்படும் எனவும் கூறப்படுகின்றது.

இதேசமயம், சீனி, கருவாடு, ரின்மீன் போன்றவற்றிற்கான சுங்கத்தீர்வையை 30 வீதத்தில் இருந்து 50 வீதத்திற்கு குறைக்குமாறு டி. பி. விஜேதுங்கா விடுத்துள்ள பணிப்பினால், மேலும் 30 கோடி ரூபா இழப்பு ஏற்படும் என கணிப்பிடப்படுகின்றது.

அத்தோடு, ஊழியர்களின் சம்பள உயர்வுகள், சலுகைகள் என்பனவற்றால் மேலும் பல கோடி ரூபா அரசிற்கு தேவையாகவுள்ளது அடுத்து சிறு விவசாயிகளுக்கு இலவசமாக 500 ரூபா பெறுமதியான உரம் வழங்கல் போன்ற சலுகைத் திட்டங்களுக்கும் பெரும் நிதி தேவையாக உள்ளது.

இவைதவிர, அரசாங்க நிர்வாகப் பதவி வெற்றிடங்களையும், ஆசிரியர் போன்ற சேவைதுறை வெற்றிடங்களையும் நிரப்புவதற்குமாக வெளியிடப்படும் வேலைவாய்ப்பு அறிவிப்புக்கள் சுமார் 10,000 பேருக்கு புதிய வேலைகளை வழங்கக் கூடியனவாக உள்ளன இவை அமுலாக்கப்படும் பட்சத்தில் பல கோடி ரூபா மாதாந்த வேதனமாக வழங்க வேண்டிய நிலையும் அரசாங்கத்திற்கு உண்டு.

இவ்வாறாக அரசாங்கம் அறிவித்துவரும் சலுகை, மற்றும் வேலைவாய்ப்பு அறிவிப்புக்களைக்கண்டு உலக வங்கி, ஆசிய வங்கி உட்பட பொருளாதார நிபுணர்கள் பலரும் ஆச்சரியமும், அதிர்ச்சியும் அடைந்துள்ளனர். சிறிலங்காவின் பொருளாதாரத்தை மேலும் இவ் அறிவிப்புக்கள் பாழ்படுத்தும் என திறைசேரி அதிகாரிகளே வெளிப்படையாகத் தெரிவிக்கின்றனர்.

ஆனால், இவ்வளவு சலுகைகளையும், அறிவிப்புக்களையும் வெளியிடும் சிறிலங்கா அரசாங்கம், வடக்கில் தொழில் இழந்த மீனவருக்கு வழங்கி வந்த நிவாரணத்தை நிறுத்தியுள்ளது. சிறிலங்கா அரசாங்கம் தனது இனவாதச் சிந்தனையை எவ்வேளையிலும் மறக்கத்தயாராக இல்லை என்பதைக் காட்டுவதாகவே உள்ளது இது. அதாவது வாக்கு வேட்டைக்காக சிங்களவருக்குப் பெரும் சலுகைகளை வழங்கத்தயாராக உள்ள அரசாங்கம், தனது நடவடிக்கையால் தொழில் இழந்த தமிழ் மக்களுக்கு, உணவு அளிப்பதற்கான நிவாரணத்தைக்கூட வழங்கத்தயாராக இல்லை என்பதே யதார்த்த நிலையாகும்.

---

...ங்கா அரசுக்குக் கண்டனத்தைத்தெரிவித்துக் கொள்ளவும் தமிழக மீனவர் இரத்தத்தால் கடல் நீரை சிவப்பாக்கும் இந்த அநியாயத்தை தட்டிக்கேட்காமல் வேடிக்கை பார்க்கும் மத்திய அரசின்...

...சட்டத்தின்கீழ் ... பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இச்சட்டம் எப்படி அமுலாக்கப்படுகிறது என்பது பற்றிய விபரங்களை மாநில அரசுகளிடம் மத்திய அரசு கேட்டுள்ளதாகவும் மேலும்...

...ள்ளார்

இவ் அகதிகள் இலங்கை டிபோக், பங்களாதேஷ், மற்றும் மியான்மரைச் சேர்ந்தவர்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# போராட்டம், தியாகம் என்பவற்றை சிவப்பு வர்ணம் குறிக்கிறது

## புதிய கட்சி கொடிகுறித்து மறுமலர்ச்சி தி.மு.க

(சென்னை)

வை. கோபாலசாமி தலைமையிலான போட்டி திமுக பொதுக்குழுகூட்டம்சென்னை தி. நகரில் உள்ள நடிகர் சங்கக் கட்டிடத்தில் அண்மையில் நடைபெற்றது

வை. கோபாலசாமி தலைமையிலான இக்கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேறின. தேர்தல் ஆணையகம் வழங்கிய தீர்ப்பினை அடுத்து அறிஞர் அண்ணாவின் இலட்சியங்களைக் காத்து உண்மையான திராவிட இயக்கத்திற்கு மக்கள் பேராதரவைப்பெற்று தமிழ் மண்ணில் அறிஞர்காண நினைத்த மறுமலர்ச்சியை உருவாக்க நம் கழகத்திற்கு மறுமலர்ச்சி திமுக என புதிய பெயர் இடப்படுகிறது. இதன் கொடி மூன்று சம பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு மேலும் கீழும் சிவப்பு நிறமும், மத்தியில் கறுப்பும் இருக்கும்.

கொடியின் நடுவே இருக்கும் கறுப்புவர்ணம் அரசியல் பொருளாதார சமுதாய வாழ்வில் உள்ள இருண்ட நிலையை உணர்த்தி நிற்கும் அதற்கு மேலும் கீழும் உள்ள சிவப்பு வர்ணங்கள் அம்மூன்று துறைகளிலும்உள்ள இருண்ட நிலையை போக்கி அரசியலில் நேர்மையையும் பொதுவாழ்வில் தூய்மையையும் நிலைநாட்டி இலட்சியத்தில் உறுதிகொண்டு மறுமலர்ச்சியை உருவாக்கிட நடைபெற வேண்டிய போராட்டத்தையும் தியாகத்தையும் குறிக்கின்றது என இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது

இக்கூட்டத்தைத் தொடர்ந்து செய்தியாளர்களிடையே பேசிய வை. கோபாலசாமி ''இக்காலத்தில் ஏற்பட்ட தேக்கநிலையைப் போக்க மறுமலர்ச்சி தேவை தமிழ் நாட்டில் உள்ள கேடுகெட்ட நிலையை மாற்ற அதிமுக என்ற லஞ்சஆட்சியை அகற்ற வேண்டும என்பதே எம் குறிக்கோள் மைலாப்பூர் பெருந்துறை இடைத் தேர்தல்களில் இதுவே எங்கள கோஷமகும் கலைஞரை மக்கள் நிராகரித்துவிட்டனர். அதிமுக மீது மக்கள் வெறுப்புக்கொண்டு விட்டனர் அதிமுக வைத் தோற்கடிக்கக்கூடிய சக்தி எமக்கே உள்ளது''

காங்கிரசிற்கு எதிரான அணியுடன் கூட்டுவைப்போம் பாரதிய ஜனதா மதவெறிக் கட்சி எனவே அதனுடன் கூட்டுச்சேரமாட்டோம் காங்கிரசுடன் கூட்டுச்சேர கலைஞர் திரைமறைவில் முயற்சிசெய்கிறார் அவர்களும்கலைஞருடன் கூட்டு வைக்க முயல்கின்றனர் காங்கிரசுடன் கலைஞர் கூட்டு வைத்தால் அதற்கு எதிரான அணியில் நம் சேருவோம் வன்முறை அரசியலை தமிழகத்தில் ஏவிவிட்டவர்கலைஞர் அதனால் எம் இயக்கத்தைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான அடிமட்டத் தொண்டர்கள் அவர்களின் வன்முறையைப் பெறுத்துக்கொண்டனர் மோதல் அரசியல்கூடாது வன்முறைக்கு இடமளியாது செயற்படுவோம் என்றார்

# லஞ்சமும் குறுக்கு வழியுமே தேர்தலை நடத்துகிறது

## இந்திய தேர்தல் ஆணையாளர் சேஷன்

(சென்னை)

சட்டசபை தேர்தலுக்கு ஒரு வேட்பாளர் 50 ஆயிரம் ரூபாய்தான் செலவு செய்ய வேண்டும் என்று விதியுள்ளது; பாராளுமன்ற தேர்தலுக்கு 1 9 இலட்சம் ரூபா செலவு செய்ய அனுமதியுள்ளது. ஆனால் உண்மையில்நடப்பது இதற்கு எதிராகவே நம் நாட்டில் தேர்தலை நடத்துவது குறுக்குவழி, பணம், லஞ்சம் என்பவையே இவ்வாறு இந்திய தேர்தல் ஆணையாளர் டி. என். சேஷன் கூறினார்.

அண்மையில் சென்னை வந்த அவர் அவினாசிலிங்கம் பெண்கள் பல்கலைக் கழகத்தில் கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு பேசினார்.

அவர் மேலும் பேசுகையில், டில்லியில் அண்மையில் நடந்த ஒரு சட்டசபை தேர்தலில் போட்டியிட்ட அம்மா ஒருவர் 55 இலட்சம் ரூபாவை செலவிட்டார் எம் பியாக வருவதற்கு 8 கோடி ரூபா செலவிட்டுள்ளார் சட்டசபைக்குள் நுழையும் போதே எம் எல். ஏக்களும் சரி எம். பிகளும் சரி பொய கணக்கு கொடுத்தே நுழைந்து விடுகின்றனர். இந்தியா உருப்படியாக வேண்டுமானால் தனிநபர் ஒழுக்கம் தேவை.

எனது 35 ஆண்டு கால பணியில் நீதிக்கு எதிராக வாய் திறந்ததில்லை. காலை 8மணி முதல் இரவு 7 மணிவரை வாகனங்களில் ஒலிபெருக்கி மூலம் தேர்தல் பிரசாரம் செய்யலாம் என உத்தரவிட்டுள்ளேன். இதற்கு தடைகேட்டு நீதிமன்றம் சென்றனர். ஆனால் நீதிமன்றம் தடைவிதிக்க மறுத்துவிட்டது. தேர்தலை பொறுத்தவரை நான் அம்பயர்தான் இருக்கும் விதிப்படி நடக்கிறீர்களா என கண்காணிப்பதும் என் பொறுப்பு பிழை எனில் விசில் அடிப்பேன் அவ்வளவே.

உத்திரப் பிரதேசத்தில் தேர்தல் நடத்தி எம். எல். ஏக்களை அனுப்பினால் மைக்குகளை பிடுங்கி ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டு இரத்த காயங்களுடன் வெளியே வருகின்றனர் என தேர்தல் ஆணையாளர் டி. என். சேஷன் குறிப்பிட்டார்.

---

...வாகன அணி ஒன்று தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது இதன்போது வாகன அணியில் மூத்த ஐ நா பிரெஞ்சு அதிகாரிஒருவர் இருந்தபோதிலும் அவர் காதுகாப்பிற்காக குழி ஒன்றில் பதுங்கிக்கொண்டதை அடுத்து உயிராபத்து ஏதும் ஏற்படவில்லை இச்சம்பவத்தில் வேறு எவரும் காயமடையவில்லை

இச்சம்பவம்குறித்து றுவாண்...

...பெற்ற விதியுடான அரசபடைகளின் போக்குவரத்து கிளர்ச்சியாளர்களால் துண்டிக்கப்பட்டுள்ளதுகுறிப்பிடத்தக்கது

இதேசமயம் றுவாண்டாவிற்கு மேலும் அதிக தொகையில் ஐ நா படைகளையனுப்ப ஆலோசிக்கப்படினும் அதற்கு கடும் ஆட்சேபனை பல தரப்பிலிருந்து வெளிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## புலிகளின் குரல்

## நிகழ்ச்சி நிரல்

**1994 - 05 - 17**

**செவ்வாய் - இரவு**

8. 01 - ஊர்சுற்றும் ஒலிவாங்கி

8. 10 - அறிந்துகொள்ளுங்கள் தகவல் களஞ்சிய நிகழ்ச்சி.

8. 20 - நலந்தானா, தொண்டையில் ஏற்படும் நோயும், புற்று நோயும் அவை பற்றிய ஆலோசனைகளும்.

8 30 - செய்திகள்.

8. 40 - கருத்துக்களம் ''விலை''

8. 50 - களமும் கானமும் 'காற்றாய் கடவலைய ம்'

**1994 - 05 - 18**

**புதன் - காலை**

7. 02 - ம வீரர் வணக்கம்

7. 15 - நீங்கள் கேட்டவை

7 30 - செய்திகள்

7. 35 - பத்திரிகைச் செய்திகள்

7. 40 - தொடர்ந்து நீங்கள் கேட்டவை.

## பண்ருட்டியின் புதிய கட்சி

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட பண்ருட்டி ராமச்சந்திரன்மக்கள் நலவுரிமை கழகம் என்ற பெயரில் புதிய கட்சியொன்றை ஆரம்பித்துள்ளார்.

சிவப்பு மற்றும் மஞ்சள் நிறங்களைக் கொண்டு இப் புதிய கட்சியின் கொடி விளங்கும் என்றும், கட்சியின் கொடியில் திருவள்ளுவர் படம் பொறிக்கப்படும் எனவும் கூறப்படுகிறது.

இக் கட்சியின் பொதுச் செயலாளராக இந்திய நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## கம்யூனிஸ்ட் குற்றச்சாட்டு

(சென்னை)

இலங்கை அரசு கச்சதீவு ஒப்பந்தத்தை தொடர்ந்து மீறி வருகிறது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சுட்டிக் காட்டியுள்ளது.

அண்மையில் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இக் கட்சி வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில் கச்சதீவு ஒப்பந்தத்தை மீளாய்வு செய்வது தொடர்பாக மத்திய அரசு ஆராய வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

# ஜூரர்களை தாக்க முயன்ற மரணதண்டனைக் கைதி

(கொழும்பு)

கொலை, கொள்ளை வழக்கொன்றில் எதிரிக்கு காலி மேல் நீதிமன்றத்தில் மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டபோது எதிரி சற்றும் எதிர்பாராத விதமாக கூண்டிலிருந்து பாய்ந்து வந்து ஜூரர்களை தாக்க முயன்றார் சிறைக்காவலர்கள் எதிரியை மடக்கி விலங்கிட்டு மீண்டும் எதிரிக் கூண்டில் வைத்தனர்.

நீதிமன்றத்தில் பயமுறுத்தல் செய்த குற்றத்திற்காக எதிரிக்கு மரணதண்டனையுடன் ஏழுவருட கடூழிய சிறைத்தண்டனை விதித்த நீதிபதி ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தவும் உத்தரவிட்டார்.

1988 இல் அக்கமுல்லா என்னும் கிராமத்தில் தாய், பிள்ளைகள் உட்பட நால்வரையும் வேறு இரு சகோதரர்களையும் வெட்டிக் கொன்றதாகவும் கொள்ளையடித்ததாகவும் இவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

# கடல் வலயச் சட்டம் நீக்கம் சில பகுதிகளில் மட்டும் அமுல்

## அரசாங்க தரப்பினர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மன்னார் கடற்பிரதேசத்திலிருந்து திருகோணமலை கடற்பிரதேசம் வரை உள்ள கடல் வலயத் தடைச்சட்டம் தொடர்ந்து நீக்கப்பட்டே உள்ளது. ஆயினும் பாதுகாப்பை முன்னிட்டு சில கடற் பகுதிகளில் தடை அமுல்படுத்தப்பட்டுள்ளது

சிறிலங்க அரசாங்க தரப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

யாழ் செயலகத்திலிருந்து சமீபத்தில் கொழும்பு சென்ற அதிகாரிஒருவரிடம் இவ்வாறு தெரிவிககப்பட்டுளது.

கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் மேற்படி கடல்பிரதேசத்தில் உள்ள கடல் வலயத் தடைச்சட்டம் நீக்கப்படுகின்றது என சிறிலங்கா அரசாங்கத்திடமிருந்து கடந்த பெப்ரவரி மாதம் இறுதிப் பகுதியில் யாழ் அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்ட செய்தியில குறிப்பிடப்பட்டிருந்தமை தெரிந்ததே

கடந்தஆண்டு செப்ரெம்பர் மாதம இரண்டாம் திகதி நள்ளிரவு தொடக்கம் இச் சட்டம் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது-

இதற்கான உத்தரவை சிறிலங்கா ஜனாதிபதி டி-பி-விஜேதுங்கா பிறப்பித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது-

மார்ச் முதலாம் திகதியிலிருந்து கடல்வலயச் தடைச் சட்டம் நீக்கப்படுவதாக வெளிவந்த அறிவிப்பைஅடுத்து இக் கடற்பிராந்தியத்தில் மீன் பிடிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனக் கருதி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட பல மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலுக்குஉள்ளாகி இறந்தும் காயமடைந்தும் உள்ளனர்

இதன் காரணமாக கடற்பிராந்திய தடை உத்தரவு விலக்கப்படவில்லை என்றே மீனவர் மத்தியில் கருத்து உள்ளது

இந்த நிலைமையில் தொடர்ந்து குறிப்பிட்ட கடற்பகுதியில் கடல்வலயத் தடைச் சட்டம் நீக்கப்பட்டேஉள்ளது என்று சிறிலங்கா அரசாங்க தரப்பினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

திருமலை கடற்பிராந்தியத்தில் தொடர்ந்து மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் தொழிலை தடைசெய்யுமாப்போல படையினர் எதுவித நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. சில கடற்பகுதியில் மட்டும் பாதுகாப்பு காரணங்களைமுன்னிட்டு தடை அமுல் செய்யப்பட்டுள்ளது என சிறிலங்கா அரசாங்க தரப்பினர் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (தி.பா)

## உதைபந்தாட்ட போட்டி

அளவெட்டி விநாயகர் வி. கழகத்தால் மகாஜனக் கல்லூரியின் இணுவில் மைதானத்தில் நடாத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்கள் 3 30 மணிக்கு இரண்டாம் பிரிவு வட்டுக்கோட்டை வி.கழகம் எதிர் மானிப்பாய் சில்வஸ்ரர் வி. கழகம் 4.30 மணிக்கு முதலாம் பிரிவு நாவாந்துறை கலைவாணி வி. கழகம் எதிர் பாஷையூர் சென் அன்ரனீஸ் வி. கழகம்.

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் பதவி

யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்தின் (வலயம் 1) பாடசாலைகளில் பகுதிநேர அடிப்படையில் ஆங்கில ஆசிரியர்களாக சேவையாற்றுவதற்கு 65 வயதுக்கு மேற்படாத ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் மற்றும் ஆங்கிலம் கற்பிப்பதற்குதகுதியுடையஓய்வு பெற்ற அரசஉத்தியோகத்தர்கள் மற்றும் தகுதியுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

# இந்தியமீனவர் தாக்கப்படுவது குறித்து சிறிலங்கா அரசுடன் பேசவேண்டும்

## பிரதமர் நரசிம்மராவிடம் வாழப்பாடி வற்புறுத்து

(சென்னை)

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவதை நிரந்தரமாகத் தடுக்கும் வகையில் இந்தியப் பிரதமர் பி வி நரசிம்மராவ் சிறிலங்கா அரசுடன் பேச்சுவார்த்தைநடத்தவேண்டும் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்

இது தொடர்பாக அவர் பிரதமர் பி வி நரசிம்மராவுக்கு அனுப்பி வைத்துள்ளஒரு தந்தியில், சர்வதேச கடற் சட்டத்தை மீறி இலங்கை அரசு இத்தகைய அச்சுறுத்தல்களில் தொடர்ந்து ஈடுபட்டுவருவதால் எச்சரிக்கை விடுப்பதுடன் இனியும் நின்று விடக்கூடாது என்றும், பிரதமர் பி வி நரசிம்மராவ் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மேலும் தெரிவித்துள்ளார்

மீனவர் மீது தாக்குதல் தொடர்பின்

# இலங்கை தூதுவரகம் முற்றுகையிடப்படும்

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்படுவது தொடருமேயானால் சென்னையிலுள்ள இலங்கைத் தூதுவரகம் முற்றுகையிடப்படும் என்று தமிழக காங்கிரஸ் கமிட்டித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி எச்சரிக்கை விடுத்துள்ளார்

அண்மையில் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக நேற்று நாகப்பட்டினம் பகுதியில் வேலை நிறுத்தமும் இடம் பெற்றுள்ளது.

# வலி. வடக்கு செல்வர்

(யாழ்ப்பாணம்)

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் அதிகாரிகள் குழு ஒன்று இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளான வலி வடக்குப் பகுதிக்கு விஜயம் செய்துள்ளது-

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ்- வதிவிடப்பிரதிநிதி உட்பட மேலும் இரு அதிகாரிகளும் இக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்-

இக் குழுவினர் பலாலி, மாதகல், இளவாலை ஆகிய பகுதிகளுக்குச் சென்று அங்கு தங்கியிருக்கும் மக்களைப் பார்வையிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது- நாளை மறுதினம் இவர்கள் அங்கிருந்து திரும்புவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது-

இக் குழுவினர் அங்குதங்கியிருக்கும் காலத்தில் பலாலித் தள இராணுவ உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்துவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது (க).(நி)

அதிகாரி மாற்றத்தினால்

# அத்தியாவசிய சேவைகள் ஸ்தம்பிதமடையும் நிலை

(யாழ்ப்பாணம்)

கொள்கைத் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் பதவியை கலாநிதி வீரசூரிய ஏற்றுள்ளதை அடுத்து வடமாகாணத்திற்கான சிறிலங்கா அரசின் அத்தியாவசிய சேவைப் பணிகள் யாவும் ஸ்தம்பித நிலை அடைந்துள்ளன.

அத்தியாவசிய சேவைகள் சம்பந்தமான மாநாட்டில் கலந்து கொள்வதற்கு வடபகுதியிலிருந்து சென்ற பல அதிகாரிகள் கொள்கை திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் வெளிநாடு சென்றிருப்பதாலும் அவரின் பதவியை வீரசூரியா பொறுப்பேற்றிருப்பதாலும் மாநாடு நடைபெறாத நிலையில் திரும்பி வந்துள்ளனர்.

சுகவீனம் காரணமாக வெளிநாடு ஒன்றில் சிகிச்சை பெறும் ஆர். பஸ்கரலிங்கம் இல்லாத காரணத்தினால் இம் மாநாடு நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக அத்தியாவசிய சேவைகள் சம்பந்தமாக எதுவித முடிவும் பெறப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது-

இவ் ஆள் மாற்றத்தினால் வடபகுதிக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் புனர்வாழ்வுப் பணிகள் யாவும் ஸ்தம்பிதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது- [தி].[பா]

## 'வைத்திய கலசம்' அறிமுக விழா

(குருநகர்)

டாக்டர் எம் கே முருகானந்தனின் ''வைத்திய கலசம்' நூல் அறிமுக விழா 21ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ் ஆரியகுளம் அருகாமையிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறும். (21)

## பயிற்சி முகாம்கள்

தென்மராட்சிப்பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்களுக்கான உதைபந்தாட்ட வலைப்பந்தாட்ட பயிற்சி முகாம்கள் 24 ஆம். 25ஆம் திகதி மீசாலை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில்

## கொழும்பு செல்லும் நோயாளர் கவனத்திற்கு

கொழும்புக்கு கப்பலில் பிரயாணம் செய்வதற்காக தெரிவு செய்யப்பட்ட நோயாளிகளும், அவர்களது உதவியாளர்களும் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு தங்களுக்கு தேவையான உணவு மற்றும் தண்ணீருடன் யாழ்போதனா வைத்தியசாலைக்கு சமுகமளிக்கும் படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## க பொ த (உ-த) வகுப்பு பாடசாலை அதிபர் கூட்டம்

நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள யாழ்ப்பாணம் வலயம் 1 ஐச் சேர்ந்த (க. பொ. த) தகுதி பெற்ற மாணவர் விபரங்களையும், அத்துடன் தற்சமயம் உயர்தர வகுப்புகளின் எண்ணிக்கை விபரத்தையும்

# குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை சாட்சியாக ஏற்க நீதிபதி மறுப்பு

## சந்தேக நபர் விடுதலை

(கொழும்பு)

புலனாய்வு விசாரணையில் ஈடுபட்ட உத்தியோகத்தரின் முன்னிலையில் சந்தேகநபர் ஒருவர் நேரடியாக சுய விருப்பத்தின் பேரில் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை அளித்திருக்க முடியாது என்பதை ஏற்றுக் கொண்ட மேல்நீதிமன்ற நீதிபதி எதிரியை விடுதலை செய்தார்-

விடுதலைப் புலிகளுக்கு உதவியதாகக்கூறி கடந்த இரண்டு வருடங்களுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்த நாகமணி சுந்தரலிங்கம் (வயது 42) என்பவர் மீதானவழக்குவிசாரணைக்கு வந்த போதே இது இடம் பெற்றுள்ளது-

குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சியமாகக் கொண்டுவர பொலிசார் முற்பட்ட போதே எதிர்த் தரப்பினர் அதற்கு ஆட்சேபம் தெரிவித்தனர் நீதிபதி வொயர் டயர் விசாரணைக்கு உத்தரவிட்டதையடுத்துமறைமுக அச்சுறுத்தல், தூண்டுதல் என்பவற்றின் அடிப்படையிலேயே குற்றஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டிருக்கின்றது என்றும், சுயவிருப்பத்தின் பேரில் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றும் எதிர்த்தரப்பினர் நிரூபித்தனர்- இதனை ஏற்றுக் கொண்டநீதிமன்றம் எதிரியை விடுதலை செய்தது-

## பல்கலைக்கழக கல்லூரி அனுமதிக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

1991 ஆகஸ்ட், 1992ஏப்ரல் அல்லது 1992 ஆகஸ்டில் நடைபெற்ற க. பொ. த. (உயர்தர) பரீட்சைகளில் பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக்குறைந்த தேவைகளைப் பூர்த்தி செய்த பரீட்சார்த்திகளிடமிருந்து இணைந்த பல்கலைக் கழகக் கல்லூரிகளில் ... குழு கோரியுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் ''செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இல 20 உவாட் இடம், கொழும்பு - 7 எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் என கேட்கப்பட்டுள்ளனர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 26 | 17 |
| - | - |
| 12 | 4 |
| - | - |
| 1938 | 1994 |

## அறிமுக விழா

(குருநகர்)

டாக்டர் எம் கே முருகானந்தனின் ''வைத்திய கலசம்' நூல் அறிமுக விழா 21ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ் ஆரியகுளம் அருகாமையிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறும். (21)

## பயிற்சி முகாம்கள்

தென்மராட்சிப் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்களுக்கான உதைபந்தாட்ட வலைப்பந்தாட்ட பயிற்சி முகாம்கள் 24ஆம், 25ஆம் திகதி களில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளன இதில் பங்கேற்க விரும்பும் கழகங்கள் தென்மராட்சி விளையாட்டு இணைப்பாளர் திரு வை இராஜேஸ்வரன் அவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுக் கொள்கின்றது

...சுரலிங்கம் வெளிநாடு சென்றிருப்பதாலும் அவரின் பதவியை வீரசூரியா பொறு... பணிகள் யாவும் ஸ்தம்பிதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது- [தி].[பா]

## கொழும்பு செல்லும் நோயாளர் கவனத்திற்கு

கொழும்புக்கு கப்பலில் பிரயாணம் செய்வதற்காக தெரிவு செய்யப்பட்ட நோயாளிகளும், அவர்களது உதவியாளர்களும் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு தங்களுக்கு தேவையான உணவு மற்றும் தண்ணீருடன் யாழ் போதனா வைத்தியசாலைக்கு சமூகமளிக்கும் படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## க பொ த (உ-த) வகுப்பு பாடசாலை அதிபர் கூட்டம்

நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள யாழ்ப்பாணம் வலயம் 1 ஐச் சேர்ந்த (க. பொ. த) உயர் வகுப்புக்களைக் கொண்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டத்திற்கு வரவுள்ள அதிபர்கள் கடந்த க. பொ. த (சாதாரணம்) தேர்வில் விண்ணப்பித்த, தேற்றிய, சித்தியடைந்த மாணவர் தொகை விபரங்களையும், உயர்தர வகுப்புக்களுக்கு தகுதி பெற்ற மாணவர் விபரங்களையும், அத்துடன் தற்சமயம் உயர்தர வகுப்புகளின் எண்ணிக்கை விபரத்தையும், கற்கும் மாணவர் தொகையையும் பிரிவு ரீதியாக அறிக்கைப்படுத்திக் கொண்டு வரும்படி வலயம் 1 இன் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

...பாராளுமன்றத்திற்கு இதுபற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்றும் ஆனால் புதிய முகங்களைப் பாராளுமன்றத்தில் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்

பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினர்கள் பன்னிரண்டு பேர் இருப்பதாகவும் அவர்களில் ஒன்பது பேர் அமைச்சராகவோ அல்லது இராஜாங்க அமைச்சராகவோ இருப்பதாகவும் மூவர் மட்டுமே சாதாரண பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்

...வடபகுதிக்கு...மைச் செயலகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்

அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது விண்ணப்பங்களை அத்தியாவசிய சேவைகள் ஒருங்கிணைப்புக் குழுவின் ஊடாக நடவடிக்கை தலைமைச் செயலகத்துக்கு அனுப்பலாம்.

தனியார் மருத்துவ மனைகள் மற்றும் தனியார் மருந்து வர்த்தக நிலையங்கள் தமது விண்ணப்பங்களை தேசிய ஒருங்கிணைப்புக் குழுவின் ஊடாக நடவடிக்கை தலைமைச் செயலகத்துக்கு அனுப்ப வேண்டும் விண்ணப்பங்கள் அரச அதிபரின் சிபாரிசுடன் இருத்தல் அவசியம்.

தனிப்பட்ட விண்ணப்பங்கள் தேசிய ஒருங்கிணைப்புக் குழுவின் ஊடாக நடவடிக்கை தலைமைச் செயலகத்துக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

...முடியாது ... கொண்ட மேல்நீதிமன்ற நீதிபதி எதிரியை விடுதலை செய்தார்-

விடுதலைப் புலிகளுக்கு உதவியதாகக் கூறி கடந்த இரண்டு வருடங்களுக்கும் மேலாக தடுத்து வைக்கப்...முற்பட்ட போதே எதிர்த்தரப்பினர் அதற்கு ஆட்சேபம் தெரிவித்தனர் நீதிபதி வொயர் டயர் விசாரணைக்கு உத்தரவிட்டதையடுத்து மறைமுக அச்சுறுத்தல், தூண்டுதல் என்பவற்றின் அடிப்படையி... விடுதலை செய்தது- (க).(நி)

## பல்கலைக்கழக கல்லூரி அனுமதிக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

1991 ஆகஸ்ட், 1992ஏப்ரல் அல்லது 1992 ஆகஸ்டில் நடைபெற்ற க. பொ. த. (உயர்தர) பரீட்சைகளில் பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக்குறைந்த தேவைகளைப் பூர்த்தி செய்த பரீட்சார்த்திகளிடமிருந்து இணைந்த பல்கலைக் கழகக் கல்லூரிகளில் அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு கோரியுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் ''செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இல 20 உவார்ட் இடம், கொழும்பு - 7 எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் என கேட்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் ஈழநாதம் அலுவலகத்தில் பார்வையிடலாம்.

...எட்டு ...கலைக் கழக மாணவர்கள் தெரிவு செய்யப்படவில்லை எனத் தெரியவருகிறது. அத்துடன் தேர்தலை முன்னிட்டு தற்போது அரசு அறிவித்துள்ள தொழில் வாய்ப்புகளுக்கும் இவர்கள் விண்ணப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

...டி பியை... முழுமையான ஒத்துழைப்புடன் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதோடு அரசியல் இலக்குகளை அடைவதற்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர் இவர்களின் ஒத்துழைப்பு ஐ, தே. க. கடந்த காலத்தேர்தல்களில் வெற்றியீட்டவும் உதவியது.

இதே போன்றே பாதாள உலக குற்றவாளிகளும் ஐ, தே, கவின் வெற்றிக்கு முழுமையாக உழைத்துள்ளனர் ஆனால் தற்பொழுது அரசாங்கம்நடவடிக்கைகளை எடுத்து அவர்களை கைது செய்து வருகின்றது,

இந் நிலையிலேயே இன்று பலர் ஐ, தே, கவின் நடவடிக்கையில் இருந்து ஒதுங்கத் தொடங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

...காமினி... லங்காப் பாராளுமன்றம் கூட்டப்படவுள்ளது.

பிளவுபட்டிருக்கும் ஐ- தே- கவில் தனது அதிகாரத்தை நிலை நாட்டும் முயற்சியில் ஜனாதிபதிடி- பி விஜேதுங்கா ஈடுபட்டிருப்பதாகவும், அதில் காமினி திசாநாயக்கா பெரும் உதவியாக இருப்பார் என்றும் ஜனாதிபதி டி.பி விஜேதுங்கா கருதுவதாக பி.பி.ஸி முகவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பொதுசன உதவிப்பணம்

வறிய மக்களுக்கு வழங்கப்படும் பொதுசன உதவிப் பணம் யாழ். மாவட்டத்தில் படிப்படியாக குறைக்கப்பட்டு வருவதால் இப்பணத்தை பெறும் வறியவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாண சபை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் ஒதுக்கும் பொதுசன உதவிப் பணத்தை ஒவ்வொரு வருடத்திலும் படிப்படியாக குறைத்து வந்துள்ளமையால், பல நூற்றுக்கணக்கான வறிய குடும்பங்களுக்கான நிதியுதவி நிறுத்தப்பட்டிருப்பதுடன், மற்றும் சில குடும்பங்களுக்கு இந் நிதியுதவி குறைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது

...காமினிக்கு... பது ஜனாதிபதி டி. பி: விஜேதுங்காவை மேலும் சங்கடத்திற்குள்ளாக்கியுள்ளது எனவும் பி, பி,ஸி முகவர் சுட்டிக்காட்டியுள்ளார்

...உபாலி... இவர் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் குற்ற புலன் விசாரணை பிரிவினரே இவர் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

மருதானை பொலிஸ் பகுதியில் நடைபெற்ற இரு கொலைகள் தொடர்பாக மருதானை பொலிசார் சொத்தி உபாலியிடம் விசாரணை செய்து வருவதாக மேலும் தெரிய வந்துள்ளது.


## யாழ் ஸ்ரீதரில்

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகமும

நிதர்சனமும் இணைந்து வழங்கும்

# மண்ணுக்காக....

**நடிகர்கள்**

தேவர் அண்ணா, கணேஸ், கலையரசன், அமரசிங்கம்

பிரியா, பூரணா

**மழலைத் தாரகைகள்**

சி. சிவரஞ்சனி, சி. சிவநிரஞ்சனா

**மற்றும் பலர்**

மூலக்கதை: வல்வையூரான்

இசை: முரளி

பாடல், படக்கதை, உரையாடல், நெறியாள்கை

பொன். கணேசமூர்த்தி

தினசரி மாலை 3.00 மணி, 6.00 மணி


சனி, ஞாயிறு காலை 10.30 மணி,

மாலை 3.00 மணி, 6.00 மணி

(சி- 9427)



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 26 - 12 - 1938

மறைவு: 17 - 4 - 1994

## சின்னத்தம்பி சிவலிங்கம்

(திருநெல்வேலி பிரபல வெற்றிலை வியாபாரி)

அன்புத் தெய்வமே எங்கள் ஐயாவே
உங்களைப் போல் இவ்வுலகில் யாருமில்லை
இனி எமக்கு
எம்மைப் பிரிந்து வானுறையும் தெய்வமாகி
முப்பத்தொரு நாட்கள் ஓடி மறைந்தாலும்
முப்பத்தொரு வருடங்கள் சென்றாலும் எம்
உள்ளங்களில் நிலை நின்று எம்மை வாட்டும்
ஐயா.

அன்னாரின் மரணச் சடங்கில் பங்குற்றியும் உதவிகள் செய்தும் கண்ணீர் அஞ்சலிகள் செலுத்தியும் மற்றும் சகல வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம் இன்று (17-5 1994) அன்னாரின் இல்லத்தில் நிகழும் ஆத்ம சாந்திக் கிரியையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இல 52, லோட்டஸ் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
17 05 1994

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

(சி-9442)



## மரண அறிவித்தல்

### டாக்டர் K. கதிரவேல்

(வசந்தா டிஸ்பென்சரி)

K. K. S.

டாக்டர் K. கதிரவேல் அவர்கள் அகால மரணமடைந்து விட்டார்-

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (17- 05- 94) தற்போது வசிக்கும் நீதிமன்ற வீதி, மல்லாகம் (சந்திக்கருகாமை) இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாலை நான்கு மணிக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்!

-குடும்பத்தினர்.

(8305)



இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப் பட்டது;